அதிகாரம் 17

# ஆபிரகாமுடன் தேவனுடைய தேச உடன்படிக்கை

17ஆம் அதிகாரத்தில், கர்த்தர் ஆபிரகாமுடனும் மற்றும் அவன் குடும்பத்தினருடனும் பண்ணப்போகும் உடன்படிக்கையைப் பற்றி மீண்டும் பேசியுள்ளார். ஆபிரகாமுடனும் அவனுடைய சந்ததியாருடனும் கர்த்தர் செய்யும் உடன்படிக்கையின் அடையாளமாக, விருத்தசேதனம் என்ற சடங்கை கொடுத்திருந்தார். கர்த்தருடைய திட்டத்தின், முக்கிய பாத்திரத்தின் எதிரொலியாக ஒரு புதிய பெயரை ஆபிரகாம் பெற்றுக் கொண்டதும் (17:5), மற்றும் சாராளுடைய பெயரும் கூட மாற்றப்பட்டுள்ளது (17:15).

## ஆபிராமுக்கு புதிய பெயர் (17:1-8)

**[1]ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது, கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு. [2]நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் என்றார். [3]அப்பொழுது ஆபிராம் முகங்குப்புற விழுந்து வணங்கினான். தேவன் அவனோடே பேசி: [4]நான் உன்னோடே பண்ணுகிற என் உடன்படிக்கை என்னவென்றால், நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய். [5]இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல், நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற் படுத்தினபடியால், உன் பேர் ஆபிரகாம் என்னப்படும். [6]உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப்பண்ணி, உன்னிலே ஜாதிகளை உண்டாக்குவேன்; உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்று வார்கள். [7]உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன். [8]நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார்.**

**வசனம் 1.** அதிகாரம் 16 ற்கு பிறகு பதின்மூன்று வருடங்கள் கழித்து, அதிகாரம் 17ல் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் நடந்தேறி யுள்ளன. **ஆபிரகாம் தொண்ணூற்று ஒன்பது வயதாயிருந்த பொழுது, மறுபடியும் கர்த்தர் அவனுக்கு காட்சியளித்தார்** (16:16 பார்க்க). அவர் தன்னை **சர்வ வல்லமையுள்ள தேவன்** என அடையாளம் காண்பித்துள்ளார் (אֵל שַׁדַּי, *'El Shadday*[1]). கோத்திரத் தலைவர்கள், அவரை “யெகோவா” (கர்த்தர்) என்ற பெயரில் முதலில் தெரிந்திருக்காமல் “எல்ஷடாய்” என்று தெரிந்திருந்தார்.[2]

எல்ஷடாய் என்பதன் சொல் இலக்கணமானது தெளிவற்றதாயும் மேலும் அதனுடைய சரியான அர்த்தத்தைப் பொறுத்தவரை, ஒருமித்த கருத்துக்களும் இல்லை. ஒரு தெய்வீக தலைப்பாய் இருப்பதால், ஷடாய் என்பது பழைய ஏற்பாட்டில் நாற்பத்தி எட்டு முறையும் மற்றும் எல் என்பது முன்னுரையாக ஏழு இடங்களிலும் காணப்படுகிறது (எல்ஷடாய்; ஆதி. 17:1, 28:3; 35:11; 43:14; 48:3; யாத். 6:3; எசே. 10:5). KJV ஆனது ஷடாய் என்பதை செப்துவஜிந்த்தை அடிப் படையாகக் கொண்டு παντοκράτωρ (*pantokratōr*, பன்டோகிரேட்டூர்) என்றும், “வல்லமையுள்ள” என்ற அர்த்தம் தரும்படியாகவும், இந்த பதம் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், “எல்லா வல்ல” என்று மொழிபெயர்த்துள்ளது. மதக்குருக்கள் இந்தப் பதத்தை “போது மானவர் (சுயம்)”[3] என்ற அர்த்தத்துடன் புரிந்து கொண்டுள்ளார்கள் என்று பாபிலோனிய யூதர்களின் சட்டத் தொகுதி காண்பிக்கிறது. மற்றவர்கள் எல்ஷடாய் என்பதை “தேவன், மலையிலுள்ள கடவுளில் ஒருவர்” என்றும், மற்றும் கானானியர்களின் தேவர்கள் மலை மீது வாசம் பண்ணுவதாக[4] நம்பியுள்ளார்கள் என்பதைச் சார்ந்துள்ள ஒரு பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் மற்றும் இதுவே சரியான அர்த்தம் என நினைக்கிறார்கள்.

ஷடாய் என்ற பதத்தின் சொல் இலக்கணமானது, தொடர்ச்சியான அனுமானத்தின் நிமித்தமாகவும், அதிகப்படியான திருமறை சூழல்களில் இந்தப் பெயரானது கர்த்தருடைய மாட்சிமையையும், வல்லமையையும் வலியுறுத்துகிறது (யாத். 6:3; எண். 24:4, 16; யோபு 11:7). அத்துடன் கூடுதலாக, ஷடாய் என்பது பிள்ளைகளுக்கான வாக்குத்தத்தமும், மற்றும் அவருடைய சித்தப்படி, தேசங்களை ஒற்றுமையுடன் உயர்த்துவதும் என்பது அடிக்கடி ஷடாய் என்ற பதத்துடன் தொடர்புடையதாய் இருக்கிறது (28:3; 35:11; 43:14; 48:3; 49:25). எல்ஷடாய், சரித்திரத்தில் கர்த்தர் மலடியான ஸ்திரீகளைப் பிள்ளைத்தாய்ச்சியாக மாற்ற முடியும். என்பதே எல்ஷடாய் எனப் பொருள்படுகிறது. அவர், அவருடைய சித்தப்படி, தேசங்களை உயர்த்தவோ இயற்கையை மற்றும் தாழ்த்தவோ முடியும்.

கர்த்தர், “நான் சர்வ வல்லமையுள்ள தேவன்” என்று ஆபிரகாமிற்கு அவரை வெளிப்படுத்திய பிறகு **குற்றமற்றவனாக இருந்து எனக்கு**

**முன்பாக வழிவிலகாமல் நட** என்று யெகோவா கோத்திரத் தலைவனிடம் பொறுப்பான பிறப்பித்துள்ளார். பாவமில்லாத கீழ்ப்படிகின்ற ஒரு கட்டுக் கோப்பான வாழ்க்கை வாழ, ஆபிரகாமை கர்த்தர் அழைத்தது போல முதலில் ஓசையை எழுப்பியிருக்க வேண்டும். இம்மாதிரியான வாழ்க்கை வாழ்வது நடக்கக் கூடிய ஒன்றாக இல்லாத போதிலும், அந்த வகையான ஒரு புத்திமதியானது, ஏமாற்றத்திற்கும், நம்பிக்கையின்மைக்கும் தவிர்க்க முடியாமல் கொண்டு செல்லும். இருப்பினும், கர்த்தர் ஆபிரகாமை எப்பொழுதும் கர்த்தருடைய பிரசன்னத்தை உணர்ந்து வாழ்க்கை நடத்துவதை அவன் கண்டிப்பாக அறிந்திருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் "முன்னால் நட" என்று கூறியுள்ளார். கர்த்தர் அவனுக்கு என்றென்றுமே உள்ள தோழன் என்றும், அவர் ஒருபோதும் அவனை விட்டு விலகுவதும் அல்லது கைவிடுவதும் இல்லை என்பதை அவன் அறிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பம் உள்ளவராய் இருந்தார் (எபி. 13:5, 6 பார்க்க). "குற்றமற்றவனாய்" (תָּמִים, *thamim*, தமின்) இருக்க என்று சொல்லும் போது, பாவமில்லாத சரியான ஒரு வாழ்க்கை என்ற அர்த்தம் கொடுக்காமல், "கர்த்தருடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு, ஒருவர் தன்னை" "முழுவதுமாக" அல்லது "இதய பூர்வமாக" "ஒப்புக்கொடுப்பது" என்ற அர்த்தங் கொள்ளுகிறது[5] (ஆதி. 6:9ல் கருத்துக்களைப் பார்க்க).

அவருடைய நியாயங்களையெல்லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன்: நான் அவருடைய "பிரமாணங்களை" "விட்டு விலகாமல்," அவர் முன்பாக "மன உண்மையாயிருந்து" (தமின்) (*thamim*) காத்துக் கொண்டேன் (2 சாமு. 22:23, 24) என்பது தாவீதின் வாழ்க்கை சான்றாக உள்ளது. இந்த வார்த்தைகள், தாவீது ஒருபோதும் பாவம் செய்ததில்லை என்று அர்த்தம் கொள்வதில்லை என்பதை வேதாகம கணக்கானது, அவனுடைய சில மீறுதல்களைப் பற்றி சரித்திர பூர்வமாக வெளிப்படுத்துகிறது (2 சாமு. 11:1-27; சங். 51:1-19) இருப்பினும் சில நேரங்களில் தாவீது பாவம் செய்த போதிலும், அவன் எப்பொழுதும் கர்த்தருடைய பிள்ளையாகவே இருக்க விரும்பினான் என்று தாவீதின் வாழ்க்கை வரலாறு விவரித்துக் காண்பிக்கிறது. தாவீதின் வாழ்க்கை முறையானது ஒரு பாவம் நிறைந்ததல்ல; அவனது குணத்திற்கு மாறாக எப்பொழுது நடக்கிறானோ, அப்பொழுது அது சரியான பாதையில் இருந்து விலகச் செய்துள்ளது. தாவீது கர்த்தரிடம் உண்மையாக ஒப்புக் கொடுத்திருந்ததால், பாவமானது அதற்கு நேர் எதிராக உள்ளது, மேலும் அதைத் தொடர்ந்து அவனுடைய மெய்யான மனந்திரும்புதலும் மற்றும் அதற்கு இணையாக கர்த்தரின் மன்னிப்பும் இருந்தது (2 சாமு. 12:13; சங். 32:1, 2, 5).

யெகோவாவிற்கு பணி செய்வதிலும் மற்றும் அவருடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு நடப்பதிலும், ஆபிரகாம் தன்னை முழுவதுமாக ஒப்புக் கொடுத்து, அவருடைய பிரசன்னத்தில் விசுவாச

வாழ்க்கை ஆபிரகாம் எப்பொழுதும் அதைப் போல தனிப்பட்ட வாழ்க்கை வாழவில்லை (காண்க 12:11-13; 20:1-3); ஆனால் எப்பொழுதெல்லாம் அவன் பாவம் செய்து, கர்த்தருக்கு முழுவதுமாக கீழ்ப்படிவதிலிருந்து சிறிது வழி விலகி அவனது குணத்திலிருந்து வேறுபட்டு தற்காலிகமாக நடக்கும் போது, கர்த்தரிடம் அவனது இதய பூர்வமாக ஒப்புக்கொடுத்திருந்ததற்கு நேர் மாறாக இருந்தான். கர்த்தரிடம் தேவனுடனான அவனுடைய சரியான உறவானது (நீதி), அவனது பூரணமாக கிரியைகளை அடிப்படையாகக் கொண்டிராமல் விசுவாசத்தின் மூலம் கிருபையினால் உண்டாகியுள்ளது. கர்த்தர் அவருடைய ஒப்பற்ற உதவியினாலும், மற்றும் ஆபிரகாம் அவருக்கு எதிராக செய்த பாவத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் அவனை மன்னித்தது போல, பிற்காலங்களில் தாவீதின் காரியத்திலும் செய்தார் (ரோமர் 4:1-8).

**வசனம் 2.** ஆதியாகமம் 15:18ல் கர்த்தர் ஆபிரகாமுடன் ஏற்கெனவே **உடன்படிக்கை பண்ணியிருந்த** போதிலும் கர்த்தருக்கு அவரது உடன்படிக்கையை ஆபிரகாமுடன் நிலை நாட்ட வேண்டிய அவசியம் ஏன் வந்தது என்பது தெளிவாக இல்லை. ஆனால், பதின்மூன்று வருடங்கள் கழிந்ததினால், கர்த்தர் உண்மையான உடன்படிக்கையை "உறுதி செய்ய" அல்லது "பெலப்படுத்த" விரும்பி இருக்க வேண்டும் என்பதால், "நிலைநாட்ட" (נָתַן, *nathan*, நாதன், "கொடு") என்ற பதம் இங்கே பயன் படுத்தப்பட்டுள்ளது. இப்படி இருப்பதால், கர்த்தர் ஆபிரகாமுடன் பண்ணியிருந்த உண்மையான ஒப்பந்தத்திற்கு மேலும் வலுவூட்டும் விதமாக, உடன்படிக்கையை பிறகு புதுப்பித்துள்ளார்.

முதல் உடன்படிக்கையானது ஒருதலைப்பட்சமாயும், அதை நிறைவேற்றுவதற்கு, கர்த்தர் ஒருவர் மட்டுமே இணைந்துள்ளதாய் இருந்தது. ஆபிரகாமுடைய கீழ்ப்படிதலுக்கு, தேவைப்படும் நிபந்தனைகள் அடங்கியதாயிராமல், அது இருந்தது. எப்படி இருந்தாலும், இந்த சந்தர்ப்பத்தில் கர்த்தர் உடன்படிக்கையை, மூன்று பிரிவுகளாக காட்டுவதுடன், அதில் தொடர்பு உள்ள ஒவ்வொரு கட்சிக்கும் ஒதுக்கப்பட்ட கடமைகளையும் அடையாளம் காண்பித்துள்ளார். "நான் உன்னோடே ..." என்றும் (17:4-8), "பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: இப்பொழுது நீயும்,..." (17:9-14), மற்றும் "பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: உன் மனைவி சாராயை ..." (17:15, 16) என்பதே முன்னுரையாக அவர் சொல்லியவைகள் ஆகும். பிறகு, கர்த்தர் ஆபிரகாமின் சரியான குற்றமற்ற கீழ்ப்படிதலில் அடங்கியுள்ள பொதுவான கடமையைக் குறிப்பிட்டதுடன், ஒவ்வொரு பங்குதாரரும், அவருக்கு முன்பாக எவ்வாறு இருக்க வேண்டும் என்பதின் தேவைகள் கீழே புனையப்பட்டுள்ளன. கர்த்தருடைய உடன்படிக்கையின் பகுதியை நிறைவேற்ற, அவருடைய சொந்த வழியிலேயும், மற்றும் அவருடைய கால அட்டவணைப்படியும்,

ஆபிரகாம் அவரை விசுவாசிக்க வேண்டியதாயிருந்தது. வேறு வார்த்தையில் கூறுவதானால், கர்த்தருக்கு அவருடைய திட்டத்தின்படி, அவனுக்கு உதவி செய்ய முயற்சிக்கவோ அவருக்கு முன்னால் செல்வதோ கூடாது.

இதற்கு முந்திய அதிகாரத்திலே, சாராள் நீண்ட காலமாக கர்ப்பவதியாகவில்லை என்பதால் சந்தேகம் வந்ததற்கான சான்று உள்ளது. இப்பொழுது, ஆபிரகாமிற்கு அவனது தொண்ணூற்று ஒன்பது வயது ஒரு காரணமாயும் மற்றும் அவனது சரீரம் செயல் இழந்து விட்டதையும் உணர்ந்ததன் மூலம் பிரச்சனை அதிகரித்துள்ளது. அவர்கள் இருவரது சரீரங்களும் "செத்துப் போனதையும்" (ரோமர் 4:19) எண்ணிப்பார்த்தால், இயற்கை யாகவே இனப்பெருக்கத்திற்கான நம்பிக்கை எதுவும் இல்லை. கர்த்தர், அவர்களது மனித மார்க்கமாக இருந்த ஒவ்வொரு நம்பிக்கையையும் அடைத்ததுடன், மற்றும் அவர்கள் சந்ததியாரைக் கொண்டிருப்பார்கள் என்ற வாய்ப்பும் இல்லாததே, இதன் சாராம்சமாகும். அவர்கள் "விசுவாசத்திற்கு ஏதுவாக அடைக்கப் பட்டிருந்தார்களா" (கலா. 3:23); கர்த்தரை விசுவாசிப்பதே அவர்களுக்கு இருந்த ஒரே ஒரு வாய்ப்பாக இருந்துள்ளது. ஆபிரகாம் முன்னிலையில் ஜெயிக்க முடியாத தடங்கல் காணப்பட்டதுடன் **உன்னை மிகவும் அதிகமாகப் பலுகவும் பெருகவும் பண்ணுவேன்** என்ற சந்ததியைப் பற்றிய வாக்குத்தத்தத்தை, கர்த்தர் மறுபடியும் ஒருமுறை ஏற்படுத்தினார்.

**வசனம் 3.** கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை கேட்டவுடன், **அதற்கு சாட்சியாக ஒரு பணிவுடன் ஆபிரகாம் முகங்குப்புற விழுந்தான்.** இந்தச்செயலானது, ஒரு மேலதிகாரியின் முன்னிலையில் தரும் மரியாதையாக உள்ளது (37:9, 10; 42:6; 44:14; 48:12; 2 சாமு. 9:6; 1 இராஜா. 18:7). இந்தக் காரியத்தில் கர்த்தர் ஒரு மேலதிகாரியாக உள்ளார். தலைவணங்குவதும் அல்லது முகங்குப்புற விழுவதும், மரியாதைக்குரிய பயபக்தியின் ஒரு வகையான எதிர் செயலாகவும், மற்றும் யெகோவாவின் முன்னிலையில் தொழுது கொள்ளுவதும் ஆகும் (24:52; யாத். 34:8; லேவி. 9:24; யோசுவா 5:14; எசே. 1:28). ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தைகளை ஒரு விருப்பத்துடன் செவி மடுத்ததை பணிவுடன் செயல் விளக்கமளித்ததற்கு எடுத்துக்காட்டாக வார்த்தைகளில் சொல்வதை விட, இந்தச் சைகை மூலம் செய்தது, அதிக அர்த்தத்தைக் கொடுத்துள்ளது.

**வசனம் 4.** ஆரம்ப வார்த்தைகளிலிருந்து, பேச்சின் தொனி யானது முன் வைக்கப்பட்டுள்ளது. **உடன்படிக்கையில்** கர்த்த ருடைய கடமைகள் முதலில் அறிவிக்கப்பட்டுள்ளன. **நான் உன்னைப்** பெரிய ஜாதியாக்கி (12:2) அநேக சந்ததியாருடன் (15:5)[6] என்று கர்த்தர் ஆபிரகாமை நோக்கிக் கூறினார். இது, இதற்கு முன் உள்ள தெய்வீக வாக்குத்தத்தத்திற்கு நேர் மாறாகவும், யெகோவா ஆபிரகாமிற்கு

இதை மட்டும் உறுதி செய்யாமல், நான் உன்னைத் **திரளான ஜாதிகளுக்குத் தகப்பன்** என்றார் கர்த்தருடைய உடன்படிக்கையின் பொறுப்பானது விவரிக்கப்படும் போது, ஆதியாகமத்தை ஆக்கியோன், ஆபிரகாமுடைய மனித பரம் பரையைப் பற்றிய ஆய்வில், பல கிளைகள் மூலம் பல ஆண்டுகளாக எழுதியுள்ளார். “ஜாதிகள்” அவனுடைய மனைவி கேத்தூராள் மூலமாகவும் (25:1-4), மற்றும் அவனது குமாரன் இஸ்மவேல் மூலமாகவும் (25:12-18), மற்றும் அவனது பேரன் ஏசா மூலமாகவும் (36:1-43) சந்ததியார் தோன்றுவார்கள்.

**வசனம் 5. ஆபிரகாம்** என்பதற்கு “மேன்மை மிகு தகப்பன்” என்ற பொருள்படும்படியாக, கோத்திரத் தலைவனது பெயர் **ஆபிராம்** (אַבְרָם, *’Abram*, ஆபிராம்), என்பதில் இருந்து மாற்றப்பட்டது, அவருடைய வாக்குத்தத்தத்தின் முக்கியத்து வத்திற்கு சான்றாக உள்ளது. இருந்த போதிலும், இதற்கு முந்தைய பதத்திற்கு உரிய சரியான சொல்லிலக்கணமானது, அறிஞர்களின் சர்ச்சைக்குரியதாயும், மேலும் கர்த்தர் “ஆபிரகாம்” (אַבְרָהָם, *’Abraham*, ஆபிரகாம்) என்ற பெயரைக் கொடுப்பதன் மூலம் வார்த்தை ஜாலம் ஒன்று காணப்படுவதுடன் אַב-הֲמוֹן (*’ab h$^{a}$mon*, ஏப்கமோன்) **ஜாதிகளின் தகப்பன்** என்று பொருள்படுகிறது.[7]

இன்று நாம் கடைப்பிடிப்பதை விட, பழங்கால கிழக்கத்திய கலாச்சாரத்திற்கு அருகானபடி, பெயர் மாற்றம் என்ற ஒன்று மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்துள்ளது. இன்று, பரம்பரையில் உள்ள ஒரு மூதாதையரைக் கௌரவப்படுத்தும் படியாகவோ, அல்லது நவீன கால கதாநாயகனின் பெயரையோ, அல்லது பெற்றோர்களைச் சந்தோஷப்படுத்தும்படியாக வெறும் ஒரு விவரத்துணுக்குடன் ஒலிக்கும்படியாகவோ, ஒரு பெயரானது சூட்டப்படுவதாக இருக்கலாம். பழைய ஏற்பாட்டில், பெயர்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாயும், அவைகள் அடிக்கடி அந்தக் குழந்தை எந்த மாதிரியான குணம் படைத்ததாக இருக்க வேண்டும் என்ற பெற்றோர்களின் எதிர்பார்ப்புகளை வலியுறுத்துவதாயும், மற்றும் சில நேரங்களில், அவன் அல்லது அவளது விதியை வெளிப்படுத்துபவைகளாகவும் அமைந்திருந்தன. வழக்கமாக, ஒரு தனிப்பட்டவரது குணநலன் அல்லது உலகத்தின் நிகழ்வுகளில், எதிர்கால வாழ்வில் உள்ள பங்கினைக் குறித்து அர்த்தம் கொடுப்பதாக ஒரு பெயர் மாற்றமானது அமைந்திருக்கும்.

**வசனம் 6.** ஆபிரகாமின் விஷயத்தில், அவனது பெயர் மாற்றத்திற்கான காரணமானது, கர்த்தரால் நிர்ணயிக்கப் பட்டுள்ளது: அவர் அவனை “திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாகவும்,” மற்றும் உன்னிலே **ஜாதிகளை** உண்டாக்குவேன் என்றும், மேலும் **உன்னிடத்திலிருந்து ராஜாக்கள்** தோன்றுவார்கள் என்றும், அவனை மிகவும் பயனள்ள பாத்திரமாக ஆக்குவதாகவும் உள்ளது.

“பயனுள்ள” என்ற பதமானது, அடிக்கடி “பெருகுவாயாக” (17:2) என்ற பதத்துடன் ஜோடி சேர்ந்துள்ளது. “நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்” (1:28) என்ற தேவனின் உண்மையான கட்டளை, முதல் மனிதனுக்கும், மனுஷிக்கும் இட்ட கட்டளையின் எதிரொலியாக, இந்த வார்த்தைகள் உள்ளன. ஜலப்பிரளயத்திற்குப் பின், நோவாவுக்கும் அவனுடைய குமாரர்களுக்கும், இது திரும்பவும் சொல்லப்பட்டுள்ளது (9:1, 7). ஆதாமையும், நோவாவையும் போல, ஆபிரகாம் உலக சரித்திரத்திலே, ஒரு புதிய சகாப்தத்தின் ஆரம்ப மனிதனாக நிற்கிறார். எல்லா மனித சமுதாயத்தையும் ஆசீர்வதிக்க வேண்டும் என்ற தேவனின் முதன்மையான சிருஷ்டிப்பின் திட்டமானது, பாவமானது உலகத்தினுள் நுழைந்தபின் அழிந்து விட்டது. ஜலப்பிரளயத்திற்குப் பின், அந்த ஒரு உலகத்தில் இருந்த நோவாவின் குடும்பத்தின் நீதி நேர்மையானது, மறுபடியும் பொல்லாங்கனை நலிவுறச் செய்து, சுத்தம் செய்துள்ளது. கர்த்தருடைய வாக்குத்தத்தமானது, ஆபிரகாம் “மிகவும் பயனுள்ளவனாக” ஆக்குவார் என்பது, அவனை பயனுள்ளவனாக ஆக்கும் திறமையை, கர்த்தர் முன் ஏற்பாடாக தெரிவித்தது விளக்கமில்லாததாய் இருந்த போதிலும் அவனை மிகவும் அதிகமாய்ப் பலுகப் பண்ணி, அவனிலே “ஜாதிகளை” உண்டாக்குவேன். அவனிடத்திலிருந்து “ராஜாக்கள்” தோன்று வார்கள் என்பது, ஏதோ ஒரு பார்வையாக மட்டும் அல்லாது, மேலும் கர்த்தருடைய உண்மையான வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் வண்ணமாக, நான் அவனைப் பெரிய ஜாதியாக்கி, அவனை ஆசீர்வதித்து, அவன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; அவன் ஆசீர்வாதமாய் இருப்பான். “பூமியிலுள்ள வம்சங் களெல்லாம்” அவனுக்குள் ஆசீர்வதிக்கப்படும் (12:2, 3) என்பதை செயல் படுத்துமாறும் அமைந்துள்ளது.

உன்னிடத்திலிருந்து “ராஜாக்கள்” தோன்றுவார்கள் என்ற தீர்க்கதரிசனமானது, நான் உன்னைப் “பெரிய ஜாதியாக்கி” (12:2) என்ற வாக்குத்தத்தத்திற்கு விளக்கமில்லாதவாறு காணப்பட்டது, ஆனாலும் கோத்திரத் தலைவனிடமிருந்து, தன்னாட்சி உடைய தேசங்கள் எழும்பும் என்ற அர்த்தத்தையும் தருவதாயும் உள்ளது. ஆபிரகாம் ஒரு ராஜாவாக இல்லாத போதிலும், ஏராளமான பேரரசுகளின் மூதாதையர்களின் மூல முதல்வனாய் இருந்துள்ளான். ஆதியாகமம், ஒரு முன்னேற்றமான வாக்குத்தத்தத்தின் நிறை வேறுதலை, ஏதோமியருடைய பிரபுக்கள், மற்றும் முதன்மை யானவர்களைப் பற்றி (36:9-43) யும் வெளிப்படுத்துவதுடன், மேலும் சமாதான கர்த்தர் வருமளவும் “செங்கோல்” யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை (49:10) என்பது, எதிர்காலத்தில் ஆட்சி செய்யும் ஒருவரைப் பற்றிய குறிப்பாக உள்ளது.

**வசனம் 7.** அடுத்தபடியாக, உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப் பின் தலை முறை தலை முறையாக வரும் உன் **சந்ததிக்கும்** நடுவே, **என்**

**உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்** என்று கர்த்தர் உறுதிப் படுத்தியுள்ளார். யெகோவாவை அவர்கள் **தேவனாகக்** கொண்டிருந்ததும், மற்றும் அவருடன் மிக நெருங்கிய உறவு வைத்திருந்ததுமே, உடன்படிக்கையின் மிக முக்கியமான சிறப்பு அம்சமாக உள்ளது. “தேவனுக்கும் பூமியின் மேலுள்ள சகலவித மாம்ச ஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையை நான் நினைவுகூருவேன்” (9:9-12, 15, 16) என்று நோவாவுடன் தேவன் பண்ணின உடன்படிக்கையானது, வேறுபட்டதாக உள்ளது. ஈசாக்கு மூலமாகவும், அதன் பிறகு யாக்கோபின் மூலமாகவும், ஒரு கிளையைக் கொண்ட குடும்பமாக, வாக்குத்தத்தமானது, ஆதியாகம சரித்திரத்தில், குறுகிய வட்டத்தை உண்டாக்கியுள்ளது. ஆபிரகாமின் பிள்ளைகள் ஆகார் வழியிலும் மற்றும் கேத்தூராள் வழியிலும் வந்தவர்களுடன், ஏசா வழியில் வந்த பிள்ளைகளும், சந்ததியார் கணக்கீட்டில் விலக்கப்பட்டுள்ளார்கள்.

**வசனம் 8. *நீ* பரதேசியாய்த் தங்கி வருகிற கானான் தேச முழுவதையும்**, உனக்கும் உனக்குப் பின்வரும் **உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து**, நான் **அவர்களுக்கு தேவனாயிருப்பேன்** என்று கர்த்தர் அவரது வாக்குத்தத்தத்தை புதுப்பிக்கும் வண்ணமாக, அதைச் சொல்லி சேர்ந்துள்ளார். இந்த வெகுமதியானது அவருக்கு மட்டும் அல்ல, அவரது சந்ததியினர்களுக்கும் கூட, ஒரு நித்திய சுதந்தரமாகும். கடைசியாக, ஆபிரகாமுடனும் மற்றும் அவனுடைய சந்ததியாருடனும், வாக்குத்தத்தத்தின் தனிப்பட்ட ஒரு உறவு முறையை, மறுபடியும் சொல்லியுள்ள போதிலும், அவர் அவர்களுக்குத் தேவனா யிருப்பேன் என்று விரும்பியவராய் உள்ளார். “நித்திய உடன்படிக்கை” (17:7) மற்றும் “நித்திய சுதந்திரமாக” “கானான் தேச முழுவதையும்” என்ற இந்த உறுதி மொழிகள் எல்லாம், யூதர்களுக்கு நிபந்தனையற்றது, திருப்பக்கூடாதது மற்றும் நித்திய வாக்குத்தத்தம் என்று தவறாக புரிந்து கொண்டார்கள். எப்படி இருந்தாலும், “நித்திய” என்பதற்கு எபிரெய பதத்தில் (עֹלָם, *‘olam*, ஓலம்) என்றும், அடிக்கடி அது “காலம்” என்ற ஒன்றை மட்டும் அர்த்தம் தருவதாக உள்ளது. அந்த மாதிரியான ஒரு காலம் என்பது, மூன்று நாட்கள்[8] என்ற குறுகியதாகவோ, அல்லது அது வாழ்க்கை முழுவதும்,[9] அல்லது முடிவில்லாத ஒரு காலம் மற்றும் சூழ்நிலையைப் பொறுத்து இருக்கலாம். புதிய ஏற்பாடானது, மாம்ச வழியில் உள்ள இஸ்ரவேலருடன் தேவன் வைத்திருந்த சிறப்பு உறவானது முடிவிற்கு வந்து விட்டதாக கற்றுக் கொடுக்கிறது. “நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல்” கிருபைக்குக் கீழ்ப் பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது என்பது இன்றுள்ள கர்த்தருடைய பிள்ளைகளுக்குரியது (ரோமர் 6:14; 7:4, 6). இயேசுவின் பரிகார மரணத்தின் மூலம், புது உடன்படிக்கையில் கிறிஸ்தவர்கள் பங்கேற்கிறார்கள், மேலும் பழைய

உடன்படிக்கையானது உருவழிந்து போயிற்று (எபி. 7:22-25; 8:6-13; 9:11-17; 10:9, 10). கிறிஸ்தவர்களின் இறைவனின் அருள் ஆட்சி முறையில், இன வேறுபாடுகள் பொருத்தம்றறதாய் உள்ளது. சுவிசேஷமானது எல்லா சிருஷ்டிக்கும் உரியதாயி ருக்கிறது (மத். 28:18-20; மாற்கு 16:15, 16), மேலும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் "ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின் படியே சுதந்தரராயும் இருக்கிறார்கள்" (கலா. 3:26, 27, 29).

## உடன்படிக்கையின் அடையாளம்: விருத்தசேதனம் (17:9-14)

**9பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: இப்பொழுது நீயும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததியும், என் உடன்படிக்கையைக் கைக்கொள்ளுங்கள். 10எனக்கும் உங்களுக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும். 11உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள்; அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன் படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். 12உங்களில் தலைமுறை தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் எட்டாம் நாளிலே விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும்; வீட்டிலே பிறந்த பிள்ளையும் உன் வித்தல்லாத அந்நியனிடத்தில் பணத்திற்குக் கொள்ளப்பட்ட எந்தப் பிள்ளையும், அப்படியே விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும். 13உன் வீட்டிலே பிறந்த பிள்ளையும், உன் பணத்திற்குக் கொள்ளப்பட்டவனும், விருத்தசேதனம்பண்ணப் படவேண்டியது அவசியம்; இப்படி என் உடன்படிக்கை உங்கள் மாம்சத்திலே நித்திய உடன்படிக்கையாக இருக்கக்கடவது. 14நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம்பண்ணப்படாதிருக்கிற நுனித்தோலுள்ள ஆண்பிள்ளையிருந்தால், அந்த ஆத்துமா என் உடன்படிக்கையை மீறினபடியால், தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் என்றார்.**

**வசனம் 9. இப்பொழுது**, என்பது, உடன்படிக்கையின் இரண்டாவது பிரிவைக் குறிக்கிறது நீயும் (17:14, 15 பார்க்க). 17:1-8 இல் **கர்த்தர்** "நான் செய்வேன்" என்று தொடர்ச்சியாக பல முறை சொல்லியுள்ளார்; மேலும் இங்கே, **ஆபிரகாம்** ஒரு இலக்கு என்றில்லாமல் வினைச்சொற்களின்

பொருளாக மாற்றப் பட்டுள்ளார். கர்த்தர் அவரது அன்பினாலும், கிருபையினாலும் பண்ணின உடன்படிக்கையைத் துவக்கி இருந்த போதிலும், அவர் கோத்திரத் தலைவனைப் பொறுத்த மட்டிலும் அவனிடமிருந்தும் மற்றும் அவனது சந்ததியாரிடமிருந்தும், சர்வ வல்லவருக்கு அவர்கள் பங்கு கொள்ளுமாறு, விசேஷ உறவு முறை ஒரு கீழ்ப்படிதலுடன் பதிலாக கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தார். அவர்கள் மீதுள்ள கர்த்தருடைய பொதுவான கட்டளை மிகவும் சாதாரணமாக, அவரது **உடன்படிக்கையைக் கைக்கொள்ளுமாறு** இருப்பதுடன், ஆனால், இந்தப் பொறுப்பிற்கு தேவையான எந்த விவரங்களும் இதுவரை கொடுக்கப்படவில்லை என்று அர்த்தமாகிறது.

**வசனங்கள் 10, 11.** யெகோவா, ஆபிரகாமையும் அவனுடைய **சந்ததியாரையும்** சம்பந்தப்படுத்திய **உடன்படிக்கையை** மறுபடியும் அறிவித்தார். உடன்படிக்கையின் மையக்கட்டளை என்ன வென்றால், ஆபிரகாம் வீட்டில் உள்ள **ஒவ்வொரு ஆண் மகனும் விருத்தசேதனம்** பண்ணப்படவேண்டும். விருத்தசேதனத்தில், **நுனித்தோலின் மாமிசமானது**, சர்வ வல்லவருடன் செய்த **உடன்படிக்கையின் அடையாளமாய்** இருந்திருக்கும். எல்லா எதிர்கால சந்ததியாரும் விருத்தசேதனத்திற்கு ஒப்புக்கொடுத்து, அவர்களது மாமிசத்தில் இந்த அடையாளத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

விருத்தசேதன சடங்கின் பிறப்பிடம் தெரியவில்லை, ஆனால் கி.மு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு[10] பிந்திய காலத்தில், சீரிய வீரர்கள் விருத்தசேதனம் செய்து கொண்டதற்கான சித்திரங்கள் தொல் பொருள் ஆய்வு சார்ந்த தோண்டுதல்களின் போது கிடைத்தன. ஒரு மதச்சடங்காக நூற்றிருபது ஆண்கள்[11] விருத்தசேதனம் செய்ததைப் பற்றி, கி.மு. இருபத்து மூன்றாம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட நினைவு சின்னமாக இருக்கும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நடுகல் ஒன்று இதை விளக்குவதுடன், இந்த வழக்கமானது, முற்காலத்திய எகிப்தியரின் சான்றிற்கு மேல் தளமாக உள்ளது. விருத்தசேதன நடைமுறையை, சில கானானியரும், மற்றும் அரபு தேசக் குழுக்களும் கடைப்பிடித்ததாக தெரிய வந்துள்ளது (எரே. 9:25, 26), இருந்த போதிலும், மெசபொத்தோமியாவில் வாழ்ந்த மக்களும் (ஆபிரகாமுடைய உண்மையான இல்லம்) மற்றும் பெலிஸ்தியர் களும் (கிரேக்க தீவுகளிலிருந்து) இதைக் கடைபிடிக்கவில்லை (நியா. 15:18; 1 சாமு. 17:26, 36). தீய ஆவிகளை விரட்டுவதற்காக, விருத்தசேதனம் என்ற ஒரு சடங்கானது, சில முற்காலச் சான்றாக சுட்டிக் காட்டிய போதிலும், பருவம் அடையும் போதும் அல்லது திருமணத்திற்கான ஆயத்தங்களுக்கும், விருத்தசேதனம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.[12]

எப்படியாயினும், ஆபிரகாமிற்கும் மற்றும் பின் வந்த சந்ததியாருக்கும், யெகோவாவுடன் ஒரு ஆவிக்குரிய உறவு வைத்திருப்பதற்கான ஒரு அடையாளமாகவும், மத சம்பந்தமான முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், அது இருந்திருக்க வேண்டும். மற்ற நாடுகளும் விருத்தசேதனத்தை கடைப்பிடித்திருந்தாலும், ஆண்கள் அந்தரங்க உறுப்புக்களை துணியினால் மூடி யிருப்பதாலும், இந்த அடையாளத்தை வெளியில் உள்ளவர்கள் அறிந்து கொள்ள முடியாது. முன்பு தேவன், ஆதியாகமத்திலே கொடுத்துள்ள அடையாளங்கள், பொது மக்களுக்கு தெரிந்து கொள்ளும் வகையில் வெளிப்படையாகவும், ஆதியாகமம் 1:14ல் உள்ள வானம் என்ற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டான இதை உள்ளடக்கியும், மற்றும் 4:15ல் காயீன் மீது உள்ள அடையாளம் மற்றும் 9:8-17இல் வானவில்லும் அடையாளங்களாக கொடுக்கப் பட்டதில் இருந்து இது வினோதமானதாய் இருந்திருக்கும். விருத்தசேதனம் பண்ணிக்கொண்டவர்களுக்கு, அது நன்மையானது மற்றும் இது ஒரு விசேஷ அடையாளமாகவும் இருந்திருக்கும் என்பதற்கு சான்றாக, கர்த்தரின் விருத்தசேதன கட்டளைகள் உள்ளன. ஒவ்வொரு சமயமும், அவனுக்கு அவனது சரீரத்தைக் குறித்து ஒரு விழிப்புணர்வு இருந்தபடியால், கர்த்தரின் உடன்படிக்கையின் மக்களில் ஒருவராக நினைவுகூரப்பட்டுள்ளார். தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள், அழைக்கப்பட்டவர்கள், மற்றும் யெகோவாவினால், ஒரு தெய்வ நியதிப்படி உள்ளவர்களுக்கு, மாம்சத்தில் ஒரு அடையாளமாக விருத்தசேதனம் உள்ளது.

**வசனங்கள் 12, 13. ஒவ்வொரு ஆண் பிள்ளையும்**, அவனது **எட்டாவது நாளிலே** விருத்தசேதனம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்பது கற்பிக்கப்பட்டுள்ளது (21:4 பார்க்க). உங்களுக்குள் பிறக்கும் (ஆபிரகாமுடைய) சகல ஆண் பிள்ளைகளும் விருத்த சேதனம் பண்ணப்பட வேண்டும், என்பது எல்லா ஆண் சிசுக்களையும் உள்ளடக்கிய உத்தரவாயும், அவர்கள் **வீட்டிலே பிறந்தவர்களும்**, அல்லது பணத்திற்கு கொள்ளப்பட்டவனுக்கு பிறந்தவர்களும் அடங்கியதாகும். ஆபிரகாமின் சந்ததியில் வந்த ஒருவன், உன் வித்தில்லாத **அந்நியனிடத்தில்** பணத்திற்குக் கொள்ளப்பட்ட எந்த பிள்ளையும், இந்த விற்பனை முடிந்தபின் **விருத்தசேதனம் பண்ணப்பட்டு**, அவனது வீட்டாரோடு சேர்த்துக் கொள்ளப்படலாம். விருத்தசேதனத்தின் உடன்படிக்கையானது, ஒரு நித்திய உடன்படிக்கையாக இருக்க வேண்டியதாயிருந்தது (17:8 கருத்துக்களைப் பார்க்க).

**வசனம் 14. ஒரு விருத்தசேதனம் பண்ணப்படாதிருக்கிற ஆண் பிள்ளையை**, உங்களில் யார் ஒருவரது வீட்டில் யெகோவா கண்டால், **உடன்படிக்கையை** மீறின ஒரு கடுமையான செயலாக பார்க்கப்படும் என்று சொல்லியதுடன், அவருடைய கட்டளையானது முக்கியத்துவம்

வாய்ந்ததாக அடிக்கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. விருத்தசேதனம் பண்ணப்படுவதற்கு, பருவம் அடைந்த ஆண்கள், எதிர்ப்பு தெரிவித்தால், அதன் நிமித்தம் கடுமையான விளைவுகளை சந்திக்கக்கூடும் என்பதை ஒரு எச்சரிப்புடன் உள்ளடக்கியுள்ளது. அந்த ஆத்துமா என் உடன் படிக்கையை மீறினபடியால், **தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்** என்றார். தெளிவான பொருள் விளக்குபவர்களில் சிலர் "இராதபடிக்கு அறுப்புண்டு" (כָּרַת, *karath*, கரத்) என்பது சாதாரணமாக சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட என்று அர்த்தம் கொடுப்பதாய் இருந்தாலும், இம்மாதிரியான ஒரு பார்வையானது சொல் வன்மையுள்ளதல்ல. ஒரு எபிரெய வீட்டிற்கு, ஒரு அந்நிய தேசத்து ஆண் அடிமையாக விற்கப்பட்டு இருக்கும் போது, ஏற்கனவே அவன் "அவனுடைய ஜனங்களிடம் இருந்து, அறுப்புண்டு" போயுள்ளான். சாதாரணமாக, "அறுப்புண்டு" போவான் என்பதன் அர்த்தமானது, சாவுக்கேதுவான தண்டனை என்றும், அது மனிதனாலோ அல்லது கர்த்தராலோ நிறைவேற்றப்பட்டதாயிருக்கும் (லேவி. 18:29; 19:8; 20:3, 5, 6, 17, 18; 1 சாமு. 28:9; 1 இராஜா. 11:16). இதற்கு முந்தின பார்வையில், சொற்றொடர்களைப் பார்க்கும் பொழுது, (*karath*, கரத்) என்ற பதம், மற்ற பதங்களுடன் இணைந்து, மரணத்திற்கான அபராதம் என்று தெளிவாக சொல்லப்பட்டுள்ளது (யாத். 31:14; லேவி. 20:2-5; 23:29, 30; எசே. 14:8, 9). இந்த உடன்படிக்கையின் கடுமையான தன்மையின்படி, எபிரெய வீடுகளில் ஒரு அங்கமாக இருக்கும் ஒவ்வொரு ஆணுக்கும், இது கற்பிக்கப்பட வேண்டியது என்பது தேவையானதாய் இருந்துள்ளது. வாழ்விலும் மற்றும் சாவிலும் பிரச்சனை தரும் இந்த விருத்தசேதனமானது, ஒரு உண்மையான மெய்த் தேவனுடன் கொண்டுள்ள உறவினை கௌரவப்படுத்துவதாயும், மேலும் மாம்சத்தின் ஒரு அடையாளத்தின் முக்கியத்துவம் வாய்ந்துள்ளதாயும் பணியாற்றியுள்ளது.

## சாராய்க்குப் புதிய பெயர் மற்றும் ஈசாக்கு பற்றிய வாக்குத்தத்தம் (17:15-22)

**15பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: உன் மனைவி சாராயை இனி சாராய் என்று அழையாதிருப்பாயாக; சாராள் என்பது அவளுக்குப் பேராயிருக்கும். 16நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்; அவள் ஜாதிகளுக்குத் தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன் என்றார். 17அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து: நூறுவயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ? என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டு, 18இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக!**

**என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணினான். [19]அப்பொழுது தேவன்: உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக; என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன். [20]இஸ்மவேலுக்காகவும் நீ செய்த விண்ணப்பத்தைக் கேட்டேன்; நான் அவனை ஆசீர்வதித்து, அவனை மிகவும் அதிகமாகப் பலுகவும் பெருகவும் பண்ணுவேன்; அவன் பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவான்; அவனைப் பெரிய ஜாதியாக்குவேன். [21]வருகிற வருஷத்தில் குறித்தக்காலத்திலே சாராள் உனக்குப் பெறப்போகிற ஈசாக்கோடே நான் என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்றார். [22]தேவன் ஆபிரகாமோடே பேசி முடிந்தபின்பு, அவர் அவனைவிட்டு எழுந்தருளினார்.**

இந்த அதிகாரத்திற்கு முன்னதாக, கர்த்தர் ஆபிரகாமிற்கு ஒரு குமாரனைத் தருவேன் என்று வாக்களித்திருந்தார்; ஆனால், சாராள் தாயாக இருப்பாள் என்று சுட்டிக்காட்டவில்லை அதனால்தான் கர்த்தருடைய தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றும் வகையில், வாதப் பொருத்தமுடைய வழியில், வாடகைத் தாயாக தாய்மையைப் பெற்றுக்கொள்ள ஆகார் மூலம் சந்ததி வரும் என கண்டிப்பாக அவள் நினைத்து, அவளது கணவனை, ஏற்றுக்கொள்ளும்படி செய்திருக்க வேண்டும். ஆதியாகமம் 16ம் அதிகாரத்தில் யெகோவா, இந்த வியூகதந்திரத்தை முற்றிலும் நீக்கிப் போட்டு விட்டு, சாராளை உள்ளடக்கி, சந்ததி குறித்து வெளிப்படையாக, இங்கே உறுதியளித்துள்ளார்.

**வசனங்கள் 15, 16. சாராயைப் பொறுத்தமட்டில்**, உடன்படிக்கையின் மூன்றாவது பிரிவாக குறிக்கப்படுகிறாள் (காண்க 17:4, 9). கர்த்தருடைய வெளிப்படுத்தலானது, அவருடைய தெய்வீக வாக்குத்தத்தின் சான்றாதாரமாக சாராளை **ஆசீர்வதித்து, ஒரு குமாரனை** [ஆபிரகாமிற்கு] **அவளுக்கு கொடுப்பது** என்பதன் ஒரு புதிய திருப்பமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. முதலாவது, கர்த்தர் முற்பிதாவின் மனைவிக்கு, ஒரு புதிய பெயர் சூட்டப்பட வேண்டும் என அவனிடம் அறிவித்தார். அவன் இனி அவளை சாராய் என்று அழைக்காமல் **சாராள் என்ற பெயரில் அழைக்க வேண்டும்**. கர்த்தர் ஆபிரகாம் என அவனது பெயரை மாற்றியபோது, அதைப்பற்றி அவனிடம் விவரித்துச் சொல்லியபோதிலும், அவனது மனைவியின் பெயரை மாற்றும்பொழுது, எந்த ஒரு காரணமும் கர்த்தர் தரவில்லை. உண்மையாகவே "சாராள்" என்பது "சாராய்" என்பதற்கு பதிலாக எழுத்துக் கூட்டப்படுவதாயினும், "இளவரசி" என்ற அர்த்தமுடையதாயும் உள்ளது. இந்த புதிய பெயரானது, ஆசீர்வதிக்கையில் சொல்லப்பட்டிருந்த "இராஜாக்கள்" என்பதற்கு

இணையானதாக இருக்கலாம். அவள் **ஜாதிகளுக்கு தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும்** செய்வேன் என்று கர்த்தர் உறுதி அளித்துள்ளார்.

**வசனம் 17.** இந்த வார்த்தைகளை கேட்ட பொழுது, **ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து**, இந்த வாக்குத்தத்தமானது உறுதியாக நிறைவேறாது என்று அவிசுவாசியாயிருந்தான். அவனும், சாராளும், பெற்றோராவதற்கான இயற்கையில் சாத்தியமாகும் வருடங்களைக் கடந்து வந்ததை அவன் அறிந்திருந்தான். ஆகவே, **நூறு வயதானவனுக்குப்** பிள்ளை பிறக்குமோ? அல்லது **தொண்ணூறு வயதான** சாராள் **பிள்ளை** பெறுவாளோ? என்ற கேள்விகளை கர்த்தரிடம் அவன் கேட்டான்.

**வசனம் 18. இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக** என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினான். “கர்த்தாவே, இவ்வளவு வருடங்களாக காத்துக் கொண்டிருந்த போதிலும், இந்தப் பிரச்சனைக்கு, தீர்வு காணுமாறு எவ்வித நிவாரணத்திற்கும் நீர் சம்மதம் தெரிவிக்கவில்லை என்றும், மேலும் உமது வாக்குத்தத்தத்தைப் பூர்த்தி செய்ய, நீர் தெரிந்து கொண்ட வித்தாக என்னுடைய குமாரன் இஸ்மவேலை தயவுகூர்ந்து ஏற்றுக்கொள்வீராக” என்று இதன் விளைவாக அவன் கேட்டுக் கொண்டிருந்தான்.

**வசனம் 19. இல்லை, ஆனால்** (אֲבָל, *’ᵃbal*, எபல்)[13] என்பது ஆபிரகாமின் விண்ணப்பத்திற்கு கர்த்தர் அளித்த ஒரு நிலையானதும் மற்றும் கடிந்து கொண்டு வலியுறுத்தும் மறுமொழியாய் இருந்தது. இஸ்மவேல் வாக்குத்தத்தத்தின் தெய்வீகக் குழந்தை என்ற பாத்திரமாக உமக்கு முன்பாக பிழைப்பானாக! என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணியதை, அவர் நிராகரித்ததுடன், 17:16ல் ஏற்கெனவே சொல்லியிருந்தபடி, **சாராளாலே** உனக்கு **ஒரு குமாரனையும்** தருவேன் என்பதை வலியுறுத்தினார். இந்த உறுதி மொழியை பெலப்படுத்தும்படியாக, 17:17ல் “நகைத்து” (וַיִּצְחָק, *wayyitschaq*) என்ற ஒரு வார்த்தையின் நடிப்பை ஆதாரப்படுத்தி, **கர்த்தர்** ஆபிரகாமிடம் அந்தப் பிள்ளைக்கு **ஈசாக்கு** (יִצְחָק, *Yitschaq*, இட்ஸ்ஷக்) என்று பெயரிடும்படியாக கூறினார். இந்த வாக்குத் தத்தத்தின் குழந்தையானது, கர்த்தரின் வாக்குத்தத்தமான இந்தக் குழந்தையின் பிறப்பைக் குறித்த அவிசுவாசத்தினால நகைத்த அதனுடைய தகப்பனாரின் நினைவாக இந்தப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது (18:12; 21:3, 6 பார்க்க) இதற்கு முன்பு, ஆபிரகாமிற்கும், மற்றும் அவனது சந்ததியாருக்கும் கர்த்தர் **நித்திய உடன்படிக்கையை** உறுதியளித்ததுடன் (17:7), இப்போது, அதை **ஈசாக்குக்கும், மற்றும் அவனுக்குப் பின் வரும் அவனுடைய சந்ததியாருக்கும்**, இதை நீட்டித்துள்ளார்.

**வசனம் 20.** பிறகு, **இஸ்மவேலைப்** பற்றிய ஆபிரகாமுடைய கரிசனையைக் குறித்து கர்த்தர் சொல்லும் போது **நான் உன் அங்கலாய்ப்பைக் கேட்டேன்** என்று உரையாற்றியுள்ளார். மீண்டும் மறுபடியாக "இஸ்மவேல்" என்பதற்கு "கர்த்தர் கேட்கிறார்" என்ற அர்த்தம் கொள்ளும்படியாக ஒரு வார்த்தை விளையாடலைக் காணலாம் (16:11 கருத்துக்களைப் பார்க்க). ஆகார் மூலமாக வந்த குமாரன் வாக்குத்தத்தத்தின் வாரிசு இல்லை என்று கர்த்தர் நிராகரித்த போதிலும், எதிர்கால ஆசீர்வாதங்களுக்கு இஸ்மவேல் பாத்திரவானாக இல்லை என அவனைத் தள்ளி விடவில்லை என்பதை, குழப்பத்துடன் இருந்த தகப்பனாருக்கு, கர்த்தர் மறுபடியும் உறுதிமொழி கொடுத்துள்ளார். அதற்கு நேர் எதிர் மறையாக, இஸ்மவேலினுடைய **சந்ததியாரை ஆசீர்வதித்து பெருகப்பண்ணுவேன்** என்று அவர் வாக்களித்துள்ளார். அவர் **பன்னிரெண்டு பிரபுக்களைப் பெற்ற தகப்பன்** (பன்னிரெண்டு பழங்குடியினர்கள் என்று சுட்டிக் காட்டப்படுகிறது (25:12-18 பார்க்க) என்பதற்கு அவனைக் காரணக் கர்த்தாவாகவும், மற்றும் **அவனைப் பெரிய ஜாதியாக்குவேன்** என்றும் சொல்லியுள்ளார். இந்த வாக்குமூலமானது, இதற்கு முன் கர்த்தர் ஆகாரிடம் இஸ்மவேலைக் குறித்து கொடுத்த வாக்குத்தத்தத்தை (16:11, 12) விட மேலோங்கியதாயும் மற்றும் ஒரு விசேஷமானதாயும் உள்ளது.

**வசனம் 21.** ஈசாக்கைக் குறித்து, கர்த்தருடைய வாக்குத்தத்தமானது அவன் பிறப்பதற்கு முன்னே உரைக்கப் பட்டதாயும், மேலும் இங்கே இஸ்மவேலைக் குறித்து பார்க்கும் போது, கர்த்தருடைய தெய்வீக உறுதி அளித்தலானது, அவன் பிறந்த பின்பே சொல்லப்பட்டுள்ளது (17:20). இத்துடன், ஆபிரகாமுடைய, இரு குமாரர்களுக்கு இடையில், அவரவர் களுக்குரிய ஆசீர்வாதங்களும் ஒரு நேர் எதிர்மறையானதாயும், **ஆனால்** எதிரியைப் போலவும் காட்டப்பட்டிருக்கிறது. இஸ்மவேலைக் குறித்த **உடன்படிக்கையின்** வாக்குத்தத்தமானது, 17:21ன் ஆரம்பத்தில் ஈசாக்கைக் குறித்த என்னுடைய உடன் படிக்கை என்று கொடுத்த வாக்குத்தத்தத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாய் உள்ளது. கர்த்தர் இந்த பிரச்சனையைக் குறித்து, அவருடைய நோக்கத்தையும் மற்றும் **வருகிற வருஷத்தில் குறித்த காலத்திலே சாராள்** அவனுக்குப் பெறப் போகிற **ஈசாக்கைக்** குறித்து வெளிப்படுத்திய பின், இதற்கு மேல் எந்த உரையாடலோ அல்லது முடிவுக்கு வருமுன் ஆழ்ந்து ஆராய்ந்து பார்ப்பதோ என்று எதுவும் இல்லாமல்; கர்த்தர் கதவை அடைத்து விட்டார்.

**வசனம் 22.** இத்துடன், தெளிவாக சொல்லப்பட்ட எல்லா வற்றுடனும் சந்திப்பானது முடிவடைந்தது. **கர்த்தர் அவனை விட்டு எழுந்தருளின** பின்பு, கர்த்தரின் வெளிப்பாட்டின் காட்சியானது மறைந்து விட்டது.

## உடன்படிக்கை முத்திரையிடப்படுதல்:
## ஆபிரகாமின் வீட்டாரின் விருத்தசேனம் (17:23-27)

**[23]அப்பொழுது ஆபிரகாம் தன் குமாரனாகிய இஸ்மவேலையும்,
தன் வீட்டிலே பிறந்த யாவரையும், தான் பணத்திற்குக் கொண்ட
அனைவருமாகிய தன் வீட்டிலுள்ள ஆண்பிள்ளைகள் எல்லாரையும்
சேர்த்து, தேவன் தனக்குச் சொன்னபடி, அவர்கள் நுனித்தோலின்
மாம்சத்தை அந்நாளிலேதானே விருத்தசேதனம் பண்ணினான்.
[24]ஆபிரகாமுடைய நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம்
பண்ணப்படும்போது, அவன் தொண்ணூற்றொன்பது வயதா
யிருந்தான். [25]அவனுடைய குமாரன் இஸ்மவேலுடைய நுனித்தோலின்
மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படும்போது, அவன் பதின்மூன்று
வயதாயிருந்தான். [26]ஒரே நாளில் ஆபிரகாமும் அவன் குமாரன்
இஸ்மவேலும் விருத்தசேதனம்பண்ணப் பட்டார்கள். [27]வீட்டிலே
பிறந்தவர்களும் அந்நியரிடத்திலே பணத்திற்குக்
கொள்ளப்பட்டவர்களுமாகிய அவன் வீட்டு மனுஷர்கள் எல்லாரும்
அவனோடேகூட விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள்.**

**வசனங்கள் 23-25.** கர்த்தருடைய கட்டளைக்கு, விருத்தசேதன உடன்படிக்கையின் சம்பந்தமான ஆபிரகாமின் நடவடிக்கையின் விவரமானது, அடுத்த காட்சியாக உள்ளது. சாராளுக்கு ஒரு வருடத்திற்குள் ஒரு குமாரனைக் கொடுப்பேன் என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தமானது அவனுடைய விசுவாசத்திற்கு புத்துணர்வு தந்துள்ளது. ஒரு மனித பார்வையில் பார்க்கப்படும் போது, அவன் எதை எதிர்பார்த்தானோ, அது நடக்கக்கூடாத காரியமாய் காணப் பட்டாலும், தன் வீட்டில் உள்ள ஆண் மக்கள் எல்லாரையும், **ஒரே நாளில்** விருத்தசேதனம் பண்ணும் நடவடிக்கையை அவன் ஆரம்பித்தான் (17:26 பார்க்க). **ஆபிரகாம் தொண்ணூற்றொன்பது வயதாயிருந்த** போதிலும், தெய்வீக கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, விரைவாக செயல்பட்டான். ஆபிரகாமுடைய வீட்டு மனுஷர்கள் என்பதில், ஆகாரின் மூலமாக பெற்ற **அவனுடைய குமாரனாகிய இஸ்மவேல்** உட்பட எல்லாரும் விருத்தசேதனம் பண்ணப் பட்டார்கள். அச்சமயம், அந்தச் சிறுவனின் வயது பதின்மூன்று ஆகும்.

**வசனங்கள் 26, 27.** இணையான கீழ்ப்படிதல் இல்லாமல், வேதாகம விசுவாசத்தை மனதிற்கு உகந்தவாறு பார்ப்பதைப் போல் கர்த்தர் ஒரு போதும் நோக்குவதில்லை. எவைகளையெல்லாம் உடனே செய்ய வேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டாரோ, அவற்றிற்கு **ஆபிரகாம்** கீழ்ப்படிந்து, உடனே செய்தான். **ஒரே நாளில்** ஆபிரகாமும் **அவன் குமாரன் இஸ்மவேலும்** விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள். அந்நாளிலே தானே, **அவன் வீட்டு மனுஷர்கள் எல்லாரும்**

**அவனோடே கூட விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள்.** இருந்த போது, கோத்திரத் தலைவன் விருத்தசேதனத்திற்குத் தன்னை அர்ப்பணித்த போதிலும், அவனுடைய இரட்சிப்பைப் பெற முயற்சி செய்து கொண்டிருக்கவில்லை. அதற்கு நேர் எதிர்மறையாக, ஆபிரகாமுடைய சரித்திரத்தில் கர்த்தருடைய கிருபையானது எப்பொழுதும் இருந்த போதிலும், அவனது விசுவாசமும், கீழ்ப்படிதலும், வரவர நலிவுற்றது. எனினும், "விருத்தசேதனத்தின்" முழுமையான அவசியமானது, கர்த்தருடன் கொண்டுள்ள ஐக்கியத்தைப் பாதுகாப்பதற்கான ஒன்று என ஏற்கனவே வெளிக் கொணர்ந்துள்ளது. ஆபிரகாமுடைய சந்ததியார் அல்லது அவனது வீட்டு மனுஷரில், நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படாதிருக்கிற நுனித்தோலுள்ள ஆண் பிள்ளையிருந்தால் "அந்த ஆத்துமா என் உடன்படிக்கையை மீறினபடியால்," தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் என்று கர்த்தர் சொன்னார் (ஆதி. 17:14).

## பயன்பாடு

### நமது விசுவாசத்தை வளர்த்துக் கொண்டிருத்தல் (அதிகாரம் 17)

ஆதியாகமம் 15ம் அதிகாரத்தில், கர்த்தர் ஆபிரகாமுடன் ஒரு உடன்படிக்கையை நிறுவியதும் மற்றும் அதை ஒரு பவித்திரமான நிறுவப்பட்ட சேவையுடன் முத்திரையிட்டார், இருந்த போதிலும், வாக்குத்தத்தத்தின் பிள்ளை பிறப்பதற்கு முன், சில விவரங்கள் இன்னும் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்தன. ஆபிரகாமிடமும் மற்றும் அவனுடைய சந்ததியாரிடமும், கர்த்தரின் நிலையான வாக்களிப்பைப் போல, பலிகளின் காணிக்கையின் உடன் படிக்கையானது நிறுவப்பட்டிருந்தாலும், அது ஒருவராலும் சாட்சி சொல்ல முடியாத, தனிப்பட்ட ஒரு காரியமாய் உள்ளது. மேலும், ஆபிரகாமிடமிருந்து, ஒரு சிறிய செயல்பாடு மட்டுமே தேவைப் படுகிறதாயிருந்தது. பலிகளைக் கொண்டு வருவது மட்டுமே அவன் செய்ய வேண்டியதாயிருந்தது. உடன்படிக்கையின் ஆரம்பத்திற் காகவும் மற்றும் உத்திரவாத்திற்காகவும், தீப்பந்தத்தின் தழல் வடிவில் விலங்குகளின் பிணங்களுக்கு இடையில் கடந்து செல்லும் அடையாளமாக, கர்த்தரைக் கவனிப்பதும் தான் அவன் செய்ய வேண்டியதாயிருந்தது. உண்மையில், கர்த்தர் அவரது உடன் படிக்கையின் பங்காளியின் மீது, நிறைவேற்றும்படியாக எந்த ஒரு கட்டளையையும் அல்லது பொறுப்புக்களையும் உபதேசிக்க வில்லை.

ஆபிரகாம் அவனது குடும்பத்தின் எதிர்கால சந்ததியாரை ஆண்டாண்டு காலமாக தொடர்ந்து வருவதும் மற்றும் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாயும் உள்ள ஒரு தெய்வீக கட்டளைக்கு,

வெளிப்படையாக மறுமொழி கொடுக்கும் தருணம் இப்பொழுது வந்து விட்டது. 15ம் அதிகாரத்தில் பதிவு செய்யப் பட்டுள்ள தேவனுடைய தோற்றம் குறைந்தபட்சம் பதின்மூன்று வருடங்கள் கடந்திருந்தது மற்றும், கர்த்தர் ஆபிரகாமுடைய இறையியல் புரிந்து கொள்ளுதலை வளரச்செய்ய வேண்டும். அவருடைய தெய்வீக பண்பைப் பற்றிய கொஞ்சம் அறிவு உடையவனாக ஆபிரகாம் இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். தெய்வீக திட்டத்தில் அவனுடைய பங்கு பற்றி அறிந்து கொள்வதில், சுயமாக கோத்திரத்தலைவன் வளர வேண்டும் என்றும் கர்த்தர் விரும்பினார். இதற்காக, தேவகிருபையால் ஆபிரகாமும் அவன் சந்ததியாரும் யாராக ஆக வேண்டும் என்றும், அவர்களது விதியின் பயனை நிறைவேற்ற அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்தும் அதிகமாக அவர் விவரித்தார்.

*நமக்கு என்ன தேவையோ, அதைக் கர்த்தர் நமக்குத் தருகிறார்* (17:1-8). ஆபிரகாமின் உடன்படிக்கையைக் கர்த்தர் புதுப்பிக்கவும், விரிவாக்கவும் செய்தார். அவர் இதைப் பல்வேறு வழிகளில் செய்தார்.

1. (*'El Shadday*) (எல்ஷடாய்) என்பதற்கு “சர்வ வல்லமையுள்ள தேவன்” (17:1) என்ற அர்த்தத்துடன், தன்னுடைய புதிய பெயர் ஒன்றைக் கர்த்தர் ஆபிரகாமிற்குத் தெரியப்படுத்தியதுடன், அவருடைய தெய்வீகத் தன்மையைப் பற்றி, அதிகப்படியான அறிவையும் கொடுத்தார். ஒரு ரோஜாவை, வேறு பெயரில் அழைத்தால், அதன் நறுமணம் இனியதாய் இருக்குமோ[14] என்றும் மற்றும் ஒரு பெயரில் அப்படி என்ன இருக்கிறது? என்றும், இன்று அதிகமான மக்கள் ஆலோசிக்கும்படி அதன் பக்கம் சாய்ந்துள்ளார்கள். இருப்பினும், விவிலிய காலங்களில், பெயர்கள் முக்கியம் வாய்ந்தவைகளாயிருந்தன; மக்கள் அவர்களது மூதாதையர்களின் பெயர்கள், தங்களுடைய சொந்தப் பெயர்கள், அவர்கள் குழந்தைகளின் பெயர்கள் மற்றும் முக்கியமாக அவர்களுடைய தேவர்களுடைய பெயர்கள் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி அறிந்திருந்தார்கள்.

இந்த தேவதோற்றத்தின் சமயத்தில், ஆபிரகாம் தொண்ணூற்று ஒன்பது வயதுடையவனாய் இருந்தான் (17:1) கர்த்தர் ஊர் என்ற இடத்தை விட்டு, கானானின் பூமிக்குச் செல்லும்படி அவனிடம் கூறிய காலத்திலிருந்து, அறுபது அல்லது எழுபது வருடங்கள் கடந்திருக்கக்கூடும். விக்கிரக ஆராதனை நிறைந்த கலாச்சாரம் உடைய பழங்கால மெசபொத்தோமியாவிலிருந்து, அவனை அழைத்த ஒன்றான மெய்த் தேவன் என்று தம்மை ஆபிரகாமுக்குக், கர்த்தர் வெளிப்படுத்தியிருந்தார். காலம் கடந்த பின், கர்த்தர் தம்மை மேலும் “யெகோவா” என்றும், “உன்னதமான தேவனாகிய கர்த்தர்” என்றும் ஆபிரகாமிற்கு வெளிப்படுத்தினார் (14:22).

கர்த்தருடைய அழைப்பில் இருந்து, அவருடைய வாக்குத்தத்தங்களில் மிகவும் முக்கியமான பகுதிகள் இன்னும்

நிறைவேறாமல், பல வருடங்கள் கடந்து விட்ட உண்மை சம்பவத்தின் நிமித்தம், ஆபிரகாமின் விசுவாசம் துவளும் நிலைமைக்குள்ளாயிருக்க வேண்டும். ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்களைப் போன்ற இந்த சந்ததியார் எங்கே இருக்கிறார்கள்? கர்த்தர் அவனுக்கு வாக்களித்த திரளான ஜாதிகள் எங்கே இருக்கிறார்கள்? கானானின் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ள கர்த்தர் அவனுக்கு வாக்குறுதி அளித்தது எப்படி அவனுக்கு உறுதி செய்யப்படும்? இவைகளில் ஒன்றிற்கும் அவனிடம் பத்திரம் எதுவுமில்லை. பூமியிலுள்ள எல்லா வம்சங்களுக்கும் அவன் ஆசீர்வாதமாய் இருப்பான் என்பது எப்படி சாத்தியமாகும் என்பதை அவன் புரிந்து கொண்டானோ என்று தெரியவில்லை. கோத்திரத் தலைவனுக்கு கர்த்தரைப் பற்றி மிகவும் அதிகமாக புரிந்து கொள்ளுதல் தேவைப்பட்டது. ஆகவே, அவருடைய வாக்குத் தத்தத்தை, முழுவதுமாக நிறைவேற்றும் தகுதியை உடைய எல்லா வல்லமையும் கொண்ட ஒருவர் (*'El Shadday*) எல்ஷடாய் என்று தன்னை யெகோவா வெளிப்படுத்தினார்.

முதலாம் நூற்றாண்டிலே, பாலஸ்தீனத்தில் யூத ஜனங்கள் தகப்பன் ஆபிரகாமிற்கு இணையான ஒரு ஸ்தானத்திலே இருந்தார்கள். அவர்கள் அறுபது அல்லது எழுபது வருடங்கள் அல்ல, பல நூற்றாண்டுகளாக, அவர்களின் வாக்குத்தத்த மேசியா (அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா) வரக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர் ரோமர்களை அவரது கைப் பாவையாகிய ஏரோதிய ஆட்சியாளர்களைக் கொண்டு வெளியே துரத்தி விடுவார் என்றும், மற்றும் வாக்குத்தத்த பூமியில் யெகோவாவின் இறைமையை ஸ்தாபிப்பார் என்றும், அவர்கள் நம்பினார்கள். தாவீது ராஜாவின் காலத்தில் (எரே. 23:5, 6; 33:14-16; எசே. 34:23-27) இருந்தது போல, இந்த மேசியா அவருடைய மக்களை ஆளுவார் என்றும், மற்றும் அவர்களை நிலைநிறுத்துவார் என்றும் எதிர்பார்த்தார்கள். யூத ஜனங்கள் அவைகளைப் பார்த்தது போல், இந்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்படவில்லை. காலம் செல்லச் செல்ல, மனிதர்கள் எழும்பினார்கள், சிலர் மேசியா என்றும் மற்றும் மீட்பர் என்றும் இருக்க வேண்டும் என்று நினைத்தாலும், யூதர் அல்லாதவர் ஆளும் போது, அவர்களது கனவுகளும், மற்றும் அவர்களது இயக்கங்களும், ஒன்றும் இல்லாமல் நசுக்கப்பட்டு விட்டது (மத். 24:5, 24-26; அப். 5:35-39; 21:38).

யோசேப்புக்குச் சொல்லப்பட்டபடியே, மரியாளின் குழந்தைக்கு "இயேசு" என்ற பெயரிடுவதில், அந்தப் பெயரின் விசேஷமானது, பகுதி விவரிக்கப்படுகிறது. மத்தேயுவின் கணக்கின்படி, கர்த்தருடைய தூதன் மரியாளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது என்று யோசேப்பிடம் சொன்னதின் நிமித்தம், அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான் என்று சொல்லப்பட்டுள்ளது. கர்த்தருடைய தூதன் யோசேப்பிடம், அவருக்கு "இயேசு" (Ἰησοῦς, *Iēsous*, ஐசௌஸ்)

என்று பேரிடுவாயாக ஏனெனில் “அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்” என்றான் (மத். 1:21). “யோசுவா” (יְהוֹשֻׁעַ, *Yᵉhoshua‘*, இசுவா) என்ற எபிரெய பெயர், “கர்த்தர் [யெகோவா] என் இரட்சகராயிருக்கிறார்” என்று அர்த்தம் கொடுப்பதாயும், அதுவே “இயேசு” என்று கிரேக்க மொழி வடிவில் உள்ளது. இருந்த போதிலும், பாவத்திலிருந்து யெகோவாவின் இரட்சிப்பை, இயேசு கொண்டு வருவார் நிச்சயமாக இது அரசியல் அல்லது இராணுவ விடுதலை கிடையாது.

2. நீ “எனக்கு முன்பாக” நடந்து கொண்டு “உத்தமனாயிரு” என்று கர்த்தர் உடன்படிக்கையை விரிவாக்கியதுடன், ஆபிரகாமிடம் அறைகூவல் விடுக்கிறார் (17:1). கர்த்தர் “சர்வ வல்லமையுள்ள தேவன்” மற்றும் அவர் ஒருவரே “எல்லா சக்தியும் உடையவர்” என்ற உண்மையின் அடிப்படையில், அவன் முழுமனதுடன் தன்னை ஒப்புக் கொடுத்து மற்றும் பூர்த்தியான நேர்மையான வாழ்க்கை வாழ வேண்டும். தெய்வீக வாக்குத்தத்தங்கள் நிறைவேறாத, இந்த கால பாதையில், கோத்திரத் தலைவன் ஊக்கம் இழந்து விட்டான். மறுபடியும் அவனுடைய இதயத்தையும், வாழ்க்கையையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பதன் மூலம், அவனது விசுவாசமானது புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

3. இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல், “நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக” ஏற்படுத்தினபடியால், உன் பேர் ஆபிரகாம் என்னப்படும். உன்னிடத்தில் இருந்து “ராஜாக்கள் தோன்றுவார்கள்” என்று வாக்குத்தத்தத்தின் வெளிச்சத்தில் தேவன் அவனுடைய பெயரை மாற்றினார் (17:4-6).

4. “கானான் தேசமுழுவதையும்,” உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் “நித்திய சுதந்தரமாகக்” கொடுப்பேன் (ஆதி. 17:7, 8) என்று கர்த்தர் வாக்குத்தத்தத்தை திரும்பவும் செய்கிறார். ஒரு சில வாக்குத்ததஙகளை பதுப்பித்தும்,மற்றவைகளை அதனும் கூட்டியும், மனித முன்னோக்கு பார்வை எளிமையானது என்பதால், அதைவிட எதிர்கால எல்லைகளை விரிவுபடுத்துவதையும் உள்ளடக்கி, ஆபிரகாமுடைய விசுவாசத்தையும், மற்றும் வெளிப்பாட்டையும் விஸ்தரிக்க, கர்த்தர் முயற்சி செய்து கொண்டிருந்துள்ளார். அவனுக்கு தெய்வீக ஆசீர்வாதங்களை அனுபவித்த அனுபவம் இல்லாத போதிலும், அது கர்த்தர் அவனுக்கு கொடுக்கத் தவறிவிட்டார் அல்லது அவைகளைக் கொடுப்பதற்கு முடியாதவராய் உள்ளார் என்றும் பொருள் படுவதில்லை. இந்த கர்த்தருக்குப் பயந்த வயதான மனிதன், கர்த்தர் எப்பொழுதும் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறவர் என்றும் “சர்வ வல்லமையுள்ள தேவனால்” (*’El Shadday*, எல்ஷடாய்) (18:10-14 பார்க்க) கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பதையும் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த வாக்குத்தத்தங்களில் சிலவற்றை அவனது ஆயுசு

நாட்களுக்குள் பார்க்க முடியாது எனினும் இந்த வாக்குத்தத்தங்கள் இறுதிவரை நிறைவேற, அவன் கர்த்தர் மேல் நம்பிக்கை வைப்பதும், மற்றும் பொறுமையைக் கடைப்பிடிப்பதும், அவனுக்குத் தேவையானதாய் உள்ளது.

முந்தைய கிறிஸ்தவர்களில், ஒவ்வொரு தலைமுறையினரும், ஆபிரகாமைப் போன்று, இதைப் போன்ற ஒரு சூழ்நிலையில் அவர்கள் வாழ்வில் இருந்துள்ளார்கள். கர்த்தர் கோத்திரத் தலைவனை காப்பாற்றியும்,மற்றும் பரிபூரணமாய் ஆசீர்வதித்தும் உள்ளார் (15:6; ரோமர் 4:1-5). இந்த ஆசீர்வாதங்கள் எல்லாம், ஈசாக்கு பிறப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பு உள்ளதாயும், மற்றும் பிற தெய்வீக வாக்குத்தத்தத்தங்கள் நிறைவேறுவதற்கு முன்பு உள்ளவைகள் ஆகும். அதைப்போலவே, நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தின் படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள் (கலா. 3:26-29; எபே. 1:3). அதுவுமல்லாமல், “கர்த்தரின் மூலமாய் ஆவியின் முதற்பலன்களைப்” பெற்ற நாமும் கூட விழுந்து போன ஒரு உலகத்தின் நடுவிலே, “நம்முடைய சரீர மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்” (ரோமா 8:23).

இயேசு “ஜீவனையும் அழியாமையையும் சுவிஷேத்தினாலே வெளியரங்கமாக்கினார்” (2 தீமோ. 1:10). வாக்குத்தத்தம் நிறைவாகுதல் எதிர்காலத்திற்குரியதாயினும், இப்பொழுதே நாம் அவருக்குள் பரம ஈவை ருசி பார்த்தவர்களாயிருக்கிறோம் (யோவான் 3:36; 5:24; எபி. 6:4, 5). நாங்கள் ஏற்கனவே இரட்சிப்படைந்துள்ளோம் (1 கொரி. 15:1, 2), ஆனால், இயேசு கிறிஸ்துவின் வருகை வரை, நாங்கள் எங்களுடைய இரட்சிப்பை முழுவதும் அனுபவிக்கவில்லை (ரோமர் 13:11). அந்த நேரத்தில், நம்மை அவரிடம் கூட்டிச்சேர்த்து, அந்த மேன்மையாக இராஜ்யத்திற்கு நம்மை கொண்டு செல்வார். (யோவான் 5:28, 29; 1 கொரி. 15:22-26, 52-58; 1 தெச. 4:13-18). இறையியலின்படி, தேவ ஆசீர்வாதத்தின் அனுபவமானது, “ஏற்கனவே மற்றும் இதுவரையிலும் இல்லை” என்று அழைக்கப் படலாம். நம்முடைய சரீரப்பிரகாரமான வாழ்க்கையில், கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் நிறைவேறினாலும் அல்லது நிறைவேறப்படாவிட்டாலும் ஆபிரகாமைப் போல நாமும் அவருக்கு “முன்பாக நடந்து கொண்டு” கண்டிப்பாக “உத்தமனாய் இருக்க வேண்டும்” (17:1).

*தேவன் நம்மைத் தனிமைப்படுத்தியதன் தொகுப்பு* (17:9-14). உடன்படிக்கையின் ஒரு அடையாளமாக விருத்தசேதனத்தைத் தேவன் தந்தார். இது இனப்பெருக்க உறுப்பின் மீது செய்யப்படும் வேறுபடுத்திக் காட்டும் ஒரு அடையாளம், ஏனென்றால் தேவனுக்காக, இந்த உடன்படிக்கையானது, ஆபிரகாமையும், அவனது சந்ததியாரையும், வேறுபடுத்திக் காட்டும் தொகுப்பு ஆகும்.

மனிதனுடைய வயது வரம்பின்றி, கோத்திரத் தலைவனுடைய வீட்டார் எல்லாரிலும் ஒவ்வொரு ஆணின் நுனித்தோலின் மாம்சமும் நீக்கப்பட வேண்டும். பிறக்கும் ஆண் பிள்ளை களெல்லாம் எட்டாம் நாளிலே, இம்முறையைப் பின்பற்ற வேண்டும் (17:9-12). வீட்டிலே பிறந்த பிள்ளையும், உன் வித்தல்லாத அந்நியனிடத்தில் பணத்திற்கு கொள்ளப்பட்ட எந்த பிள்ளையும், உன் பணத்திற்கு கொள்ளப்பட்டவனும் அப்படியே விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் (17:12, 13). இந்த உடன்படிக்கையின் அடையாளமானது, ஆபிரகாமின் தேவனிடம் யாரெல்லாம் விசுவாசத்தையும் மற்றும் பக்தியையும் பகிர்ந்து கொண்டார்களோ அவர்களும் மற்றும் வாக்குத்தத்த ஆசீர்வாதங்களில் பங்கேற்ற அவனுடைய உடனடியான மற்றும் பெரும் திரளான அவன் வீட்டார் எல்லாருக்கும் செயல்முறை சார்ந்ததாக அமைந்துள்ளது.

அத்துடன், இந்தச் சடங்கானது, தேவனுடைய பிள்ளைகளை அடையாளம் காட்டுகிறது என்ற அர்த்தங் கொண்டதாயும், இருதயத்திலுள்ள விருத்தசேதனத்தைச் சுட்டிக்காட்டுவதாய் உள்ளது (உபா. 10:16; 30:6; எரே. 4:4). விருத்தசேதன உடன்படிக்கையைக் கடைப்பிடியாமல் இருந்தால், அந்த ஆத்துமா என் உடன்படிக்கையை மீறின படியால் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் (17:14) என்றும், அசுத்தம், கற்பின்மை மற்றும் பல தெய்வ வணக்கங்கள், கட்டுக்கடங்காத கீழ்ப்படியாமை இவையெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியாத வைகள் என்பதால், தேவ பக்தியானது இவைகளையெல்லாம் வேரறுக்கும்படி செய்துவிடும்.

தேவன் ஆபிரகாமின் குடும்பத்தினருக்கு விருத்தசேதன அடையாளத்தை நடைமுறைப்படுத்தியதற்கு முன்னால், பண்டைய உலகில் வேறு இனத்தைச் சேர்ந்த குழுக்களும் விருத்தசேதனம் முறையை நடைமுறையில் வைத்திருந்தார்கள் என தெரிய வந்தாலும், அதனுடைய முக்கியத்துவம் குறையவில்லை. இயேசு அப்பத்தையும், திராட்ச பழரசத்தையும் அவருடைய சரீரத்திற்கும் மற்றும் இரத்தத்திற்கும் எடுத்துக்காட்டாக இருக்கிறது என்று யோசனை சொல்வதற்கு முன்பே (மத். 26:26-28), முதலாம் நூற்றாண்டில் உள்ள பிற மக்கள், அப்பத்தையும், மற்றும் திராட்சப்பழ ரசத்தையும், குறிப்பான அர்த்தத்துடன் பார்த் துள்ளார்கள். இதைப் போலவே, இறப்பு, அடக்கம் பண்ணுதல், மற்றும் இயேசுவின் உயிர்த்தெழுதல் (ரோமர் 6:1-6) ஆகியவற்றின் ஒரு வடிவமாக கிறிஸ்தவர்களின் ஞானஸ்நானத்திற்கு முன் கழுவுவதைப் போன்ற நடைமுறை வருவதற்கு முன்பே, வேறு மத வாத குழுக்கள் இதை நடைமுறைப்படுத்தியுள்ளார்கள். இது நடைமுறையில் சாத்தியமானதாய் இருக்கிறதால், காலப்போக்கில் கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய விசேஷங்களான விருத்தசேதனம் போன்ற சமயச் சடங்குகள் அர்த்தமற்றதாய் மாறிவிட்டதாலும்,

அவர்கள் ஞானஸ்நானம் மற்றும் கர்த்தரின் இராப்போஜனம் ஆகியவற்றை அனுமதிக்கும் நிலை வந்துவிட்டது. ஆவியின் படி இருதயத்தில் தேவனால் உண்டாகும் விருத்தசேதனமில்லாமல், புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனம் போது மானதல்ல என்று பவுல் வலியுறுத்தியுள்ளார் (ரோமர் 2:28, 29).

கொலோசெயரில், ஞானஸ்நானத்தையும், விருத்த சேதனத்தையும் இணைத்து, பவுல் தெரியப்படுத்தியுள்ளார். கொலோசே பட்டணத்தில் உள்ள யூதர் அல்லாத கிறிஸ்தவர்கள், மாம்சத்தின்படி விருத்தசேதனம் செய்யப்படாமல் இருந்த போதிலும், “கையால் செய்யப்படாத” “விருத்தசேதனத்தைக் கிறிஸ்துவுக்குள்” பெற்றிருப்பதினால், நீங்களும் விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்களே என்று அப்போஸ்தலர் உறுதியளித்துள்ளார் (கொலோ. 2:11) “பிறகு ஒருவன் சரீரத்திலே (கைகளுடன்) ஞானஸ்நானத்தில் அவரோடே கூட அடக்கம் பண்ணப் பட்டவனாகவும்,” அதிலே “அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவனாகவும் இருக்கிறான்” (கொலோ. 2:12) என்பதின் மூலம் “கிறிஸ்துவின் விருத்தசேதனம்” நடக்கிறது என்று அவர் விளக்கியுள்ளார். கடைசியாக, “உங்கள் பாவங்களி னாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த” உங்களையும் “அவரோடே கூட உயிர்ப்பித்து,” “அக்கிரமங்கள் எல்லாவற்றையும்” உங்களுக்கு மன்னித்ததின் நிமித்தம் (கொலோ. 2:13); ஆவிக்குரிய ஒரு விருத்தசேதனம் அவர்களில் நிறைவேறியுள்ளது என்று பவுல் அந்த சகோதரர்களுக்கு கூறியுள்ளார். கொலோசெயர்களுக்கு ஆவிக்குரிய விருத்த சேதனத்தை நிறைவேற்றிய அதே கர்த்தரே, இன்று நமக்கும் அதே நடவடிக்கையை எடுக்கிறார்: கிறிஸ்துவுக்குள் அடக்கம் பண்ணப்பட்டு, அவருடன் நீரில் ஞானஸ்நானம் எடுத்து, நாம் அவரில் விசுவாசம் வைத்து அவருக்குக் கீழ்ப்படியும்போது, அவர் நமது இருதயங்களில் உள்ள பாவங்கள் எல்லாவற்றையும் மன்னிக்கிறார் (அறுத்தெறிகிறார்). செய்த பிழைக்கு மனம் வருந்தும் ஒரு விசுவாசி ஆவிக்குரிய பிரகாரமாகவும் மற்றும் அடையாளத்தின் படியேயும், ஞானஸ்நானத்தில் அனுபவப்பட்டிருப்பதே இயேசு சரீர பிரகாரமாக கடந்து சென்றதாகும். மரித்தவன் பாவத்திற்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறான், அதைத் தொடர்ந்து, ஒரு புதிய கிறிஸ்தவன், புது வாழ்வு வாழ எழும்புகிறான் (ரோமர் 6:3-6).

*தேவன் நமக்கு முன்னே வழி காட்டுகிறார்* (17:15-22). உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு, சாத்தியமற்ற ஊர்தி போன்றது என்ற ஒரு புதிய பெயரை, தேவன் வைத்துள்ளார். ஆபிரகாமிற்கு, வாக்குத்தத்த குமாரனை அவனது மனைவியும் மற்றும் அந்த குமாரனின் தாய் சாராள் மூலமாக கொடுப்பதும், மற்றும் திரளான

சந்ததியார் வருவார்கள் என்றும் சொன்ன வாக்குத்தத்தமானது, இப்போது குறுகிய வட்டத்திற்குள் சாராளை உள்ளடக்கியதாய் உள்ளது. ஆகாருடன் செய்த பரிசோதனை மூலமாக, தம்பதியினர் ஒரு வாடகை தாயை அமர்த்துவது போதுமானதல்ல என்பதை ஏற்கெனவே கண்டு கொண்டார்கள். வாக்குத்தத்த குமாரனுக்கு, ஆபிரகாம் தகப்பனாயிருக்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமானதோ, அந்த அளவிற்கு சாராளும் தாயாக இருக்க வேண்டும் என்பது முக்கியமானதே ஆகும்.

தேவன், இதற்கு முன் மலடியாய் இருந்து மனைவியின் மூலம் கோத்திரத் தலைவனுக்கு ஒரு குமாரனைக் கொடுப்பேன் என்பதற்கு ஒரு அடையாளமாக, தேவன் அவளது பெயரை “சாராய்” என்பதிலிருந்து “சாராள்” என மாற்றினார் (17:15). இரு பெயர்களுக்கும் இடையில்; ஏதாவது வேறுபாடு இருந்ததை பொருட்படுத்தாமல், தொண்ணூறு வயதான ஒரு பெண்ணிற்கு ஒரு குழந்தை பிறக்கக்கூடுமா என்ற நினைவுதான் ஆபிரகாமிற்கு பரிகசிக்கத்தக்கதாய் காணப்பட்டது. ஆபிரகாம் அவிசுவாசத்தினால் முகங்குப்புற விழுந்து நகைத்து: தான் நினைத்தது அதிகப்படியாக காரணமுள்ள ஒரு திட்டம் என நினைத்து, இஸ்மவேல் உமக்கு முன்பாக பிழைப்பானாக! என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணி (17:16-18) அவன் மூலம் ஜாதிகளும், ராஜாக்களும் எழும்புவார்கள் என்று அவன் தேவனுக்கு ஆலோசனை கொடுத்தான். இந்த குழந்தைக்கு இப்போது பதின்மூன்று வயதாகிவிட்டதே, பின்னும் ஏன் தேவன் இதை வாக்குத்தத்ததின் குழந்தை என ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்கிறார் என்பது ஆபிரகாமிற்கு ஆச்சரியமாயிருந்தது. நிச்சயமாக, ஆபிரகாம் அகந்தை உள்ளவனாய் இருந்திருக்க வேண்டும். மறுபடியும் அவன் விசுவாசத்தைவிட, அவனுடைய தேவை தான் உயரியது என்று செயல் விளக்கம் அளித்துக் கொண்டிருந்ததைப் போல, நாம் எல்லோரும் கூட அநேகமாக இம்மாதிரியான சூழ்நிலைகளில், இவ்வாறாகத்தான் இருந்திருப்போம். எப்படி இருந்தாலும், தேவனுக்கு நாம் தான் தேவை என்பதை விட, அவனுடைய ஆலோசனை தேவையில்லை. தேவன் என்ன செய்து கொண்டிருந்தார் மற்றும் எல்லாம் அவரது கட்டுப்பாட்டிற்குள் உள்ளன என்பது அவருக்கு தெரிந்த போதிலும், அவர் நம்முடையவராய் இருக்கிறபடியால் ஆபிரகாமின் விசுவாசக் குறைவைப் பார்த்த போதும், அவர் பொறுமையாயிருந்தார்.

பல வருடங்களாக, நிறைவேறாத வாக்குத்தத்தங்களுடன் போராடிக் கொண்டிருந்தாலும், ஜாதிகளின் தகப்பனுக்கு கற்றுக் கொள்வது ஒரு கடினமான பாடமாக இருந்தது. விவிலியத்தில் உள்ள பட்டியலில் ஆபிரகாம் விசுவாசத்தின் ஓர் கதாநாயகன் என்று கூறப்படுவது ஏனென்றால் சாராள் வழியாக ஒரு குமாரனைத் தருவேன் என்ற வாக்குத்தத்தம் நிறைவேறுவதை அவன் பார்க்கும் படியாக எந்த வழியும்

இல்லாத போதிலும் அவன் விசுவாசித்தான். ஒரு மனிதனின் செய்தி கூற்றின்படி நின்று பார்த்தால், தேவன் எதை வாக்களித்திருந்தாரோ, அது நடக்கக் கூடாததாயினும், ஆபிரகாம் தான் “விசுவாசித்தவருமாய்”, “மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவை களைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற” தேவனை விசு வாசித்தான் என்று பவுல் கூறுகிறார் (ரோமர் 4:17) “உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும்,” அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான். “தன் சரீரம் செத்துப் போனதையும்,” “சாராளுடைய கர்ப்பம் செத்துப் போனதையும்” எண்ணாதிருந்தான் (ரோமர் 4:18, 19) என்று அப்போஸ்தலர் மேலும் தொடர்ந்துள்ளார்.

“விசுவாசத்தின் மேல் விசுவாசம்” வைத்திருப்பது, எப்பொழுதும் தேவனுடைய பிள்ளைகளுக்கு சவாலாக இருந்து கொண்டி ருக்கிறது. பிறகு, இஸ்ரவேலர் எகிப்தில் இருக்கும் போது, எகிப்திலுள்ள தேவர்களைச் சேவித்து விக்கிரக ஆராதனைக்குள் சென்று விட்ட படியால் (யோசுவா 24:14) அவர்கள் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் தேவனைப் பற்றி ஒரு மங்கலான நினைவையே தக்க வைத்திருந்தார்கள். அவர்கள் ஆவிக்குரிய அல்லது சரீரப்பிரகாரமான எந்தவொரு நம்பிக்கையும் இல்லாமல், மரித்துப் போன மனிதர்களைப் போல் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். கடைசியாக, கர்த்தர் மோசேயின் மூலமாக இடைப்பட்டு, எகிப்தியர்கள் மீது பத்து வாதைகளை அனுப்பி, அவருடைய ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து, விடுதலை பண்ணும்படி செய்தார். எகிப்தானது, வாதைகளினால் கொடிய துன்பத்திற்குள்ளாக்கி, அந்த பூமியும் நாசமாகிய பிறகு, பார்வோனுடைய பெருமையானது, கடைசியில் தவிடு பொடியாகி விட்டது. அவன் இஸ்ரவேலரை விடுதலை செய்ய தீர்மானித்தான். அவர்கள் எகிப்தின் எல்லையை விட்டுக் கடந்த பொழுது, ராஜா அவனுடைய மனதை மாற்றி, அவனுடைய சேனைகளை அவர்களுக்குப் பின்னாக அனுப்பி வைத்தான். எபிரெயர்கள் காலடிகளை எடுத்து வைத்து விட்டுப் பார்த்தால் அவர்களுக்கு முன் கடலும் மற்றும் அவர்களுக்குப் பின்னால் எகிப்திய சேனையும் இருப்பதைப் பார்க்கும் பொழுது ஒரு மனுஷீக நடையில் உற்று நோக்கினால், விடுதலை என்பது கூடாத காரியமாய் காணப்பட்டது.

அந்தச் சமயத்தில், கர்த்தர் அற்புதங்களினால் இடைப்பட்டார். கர்த்தர் மோசேயை நோக்கி “புறப்பட்டுப் போங்கள் [கடலுக்குள்]” (யாத். 14:15) என்ற ஒரு குளிர்ச்சியான கட்டளையைக் கொடுத்த போது, இஸ்ரவேலருக்கு அது ஒரு மரணத்துக்கேதுவான வாக்காக ஒலித்திருக்க வேண்டும். மோசே கோலை ஓங்கி, “தன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டின பொழுது,” ஜலம் பிளந்து பிரிந்து போயிற்று, மற்றும் அவர்கள்

வலது புறத்திலும் அவர்கள் இடது புறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது (யாத். 14:16, 21, 22). அவர்களுக்கு முன் இருந்த மேகஸ்தம்பமும் விலகி, அவர்கள் பின்னே நின்றது. அது எகிப்தியரின் சேனையும் இஸ்ரவேலரின் சேனையும் இராமுழுவதும் ஒன்றோடொன்று சேராதபடி அவைகள் நடுவில் வந்தது. இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று (யாத். 14:19-24). ஒரு மனித நடையில் நின்று பார்த்தால், இவை எல்லாம் கூடாத காரியமாகவே உள்ளது. "மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும்" என்பதைப் போன்ற ஒரு அனுபவத்திற்குள்ளாக இஸ்ரவேலர் சென்றிருந்தாலும், மோசேயின் தலைமைத்துவத்தைப் பயன்படுத்தி எப்படியாயினும் இவைகளிலிருந்து பாதுகாத்து அழைத்து வந்த கர்த்தர் மீது அவர்கள் விசுவாசமாயிருக்க வேண்டும். நீருக்குள்ளிருந்த அவர்களுடைய கல்லறை என்பது போல காணப்பட வேண்டியது, உண்மையாகவே மறுபக்கத்திற்கு அப்பால் உள்ள ஒரு புதிய வாழ்விற்கு அவர்களுடைய பாதையாய் மாறியது. இந்த அனுபவத்தை, 1 கொரிந்தியர் 10:1, 2 ஆகிய வசனங்களில் பவுல் ஞானஸ்நானத்துடன் ஒப்பிட்டுள்ளார். ஒரு நடைபெற முடியாத விடுதலையானது, கர்த்தருடைய வல்லமையினால் ஒரு மெய்யானதாய் மாறியது. எபிரெய நிருபத்தை ஆக்கியோன், "விசுவாசத்தினாலே" இஸ்ரவேலர் "சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்து போவது போலக் கடந்து போனார்கள்" (எபி. 11:29) என்றும், மேலும் இது ஒரு கீழ்ப்படிதலின் விசுவாசமாயிருந்ததால், அவர்களது காலடிகளை இரவு முழுவதும் நடக்கச் செய்ததன் மூலம், மறுபக்கத்தில் உள்ள கர்த்தரின் இரட்சிப்பு பெறுவதற்கான அனுபவமாயிற்று (யாத். 14:20, 22, 24).

*தயங்கக்கூடாது என்று தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார்* (17:23-27). தேவனுடைய உடன்படிக்கையின் கட்டளைக்கு ஆபிரகாம் உடனடியாக கீழ்ப்படிந்தான். தேவன் ஆபிரகாமிற்கு ஒரு புதிய பெயரை தேர்ந்தெடுத்ததும் மற்றும் சாராளுக்கும் கூட ஒரு புதிய பெயரும் மேலும் வாக்குத்தத்த குழந்தைக்கு (ஈசாக்கு) என்ற பெயர் வழங்கப்பட்டதும் போன்ற புதிய பெயர்களை வெளிப்படுத்தி, அவரது உடன்படிக்கையை புதுப்பித்ததன் மூலம், அவன் விசுவாசத்தின் ஒரு மறுமலர்ச்சியை அனுபவித்துள்ளான். இஸ்மவேல் அவனுடைய வாரிசாக இல்லாத போதிலும், இஸ்மவேலுக்காகவும் நீ செய்த விண்ணப்பத்தைக் கேட்டேன் நான் அவனை ஆசீர்வதித்து, அவனை மிகவும் அதிகமாகப் பலுகவும், பெருகவும் பண்ணுவேன், அவன் பன்னிரெண்டு பிரபுக்களைப் பெற்று அவன் ஒரு கோத்திரத் தலைவன் ஆவான்; அவனைப் பெரிய ஜாதியாக்குவேன் (17:20) என்ற தேவனுடைய ஏராளமான ஆசீர்வாதங்களைக் கேட்டவுடன் ஆபிரகாம் ஊக்குவிக்கப்பட்டான். உடன்படிக்கையின் புதிய அடையாளத்தைப் பற்றிய தேவனுடைய கட்டளையை வெறுத்துத் தள்ளாமல்,

விசுவாசிகளின் தகப்பன் அதற்கு இணங்கினான். அந்த நாளில் தானே, ஆபிரகாம் விருத்தசேதனம் பண்ணிக் கொண்டான் என்று யாத்திராகமத்தை எழுதிய ஆசிரியர் தெரிவித்துள்ளார். மேலும், அவன் தன் குமாரனாகிய இஸ்மவேலையும், தன் வீட்டிலே பிறந்த யாவரை யும், அவர்கள் நுனித்தோலின் மாம்சத்தை அந்நாளிலே தானே விருத்தசேதனம் பண்ணினான் (17:23-27).

ஆபிரகாமின் உடனடி கீழ்ப்படிதல் போன்ற மாதிரியான பதில் தான், தேவன் எப்பொழுதும் விரும்புவதாகும். இது விசுவாசத்தைக் குறிப்பிடுவதாயும், மற்றும் அவருடைய மக்களை நேசிக்கும் கர்த்தருக்கு பாராட்டுதலுமாய் இருக்கிறது. தேவன் நம்முடைய நலன்களில் கரிசனையுள்ளவராயும் மற்றும் நாம் அவருடைய ஆசீர்வாதங்களை அனுபவிக்க, நம்முடைய வாழ்க்கையை எந்த வழியில் எவ்வாறு நடத்திச் செல்ல வேண்டும் என்பதை இயக்குகிறார். நம்மை நேசிக்கிற ஒரு பரமபிதா இருப்பதால், அவர் எப்பொழுதும் நம் நன்மைக்காகவே இதைச் செய்கிறபடியால், கீழ்ப்படியாமையின் விளைவுகளால் நாம் துன்பப்பட வேண்டிய தில்லை.

இஸ்ரவேலர் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை உரிமை கொண்டாடி, கானானை சுதந்தரித்துக் கொள்வதற்காக, சீக்கிரமாக கீழ்ப்படிய, மறுத்ததன் நிமித்தம், வெறுப்பினால் உண்டான அபாயமானது ஒரு துக்ககரமான சம்பவமாக எடுத்துக் காட்டப்படுகிறது. அவர்கள் மோசே, ஆரோன், காலேப் மற்றும் யோசுவாவுக்கு எதிராக முறுமுறுத்தலுடன், அவர்கள் மேல் கல்லெறிய வேண்டுமென்றும் சொன்னார்கள், ஆனால் இதனுடைய உச்சக்கட்டமானது, அவர்கள் கர்த்தருக்கு எதிராக கலகம் பண்ணியதாகும். தீய நோக்கங்களுடன் அவர்கள் இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம் என்றும் நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கா எங்களைக் கொண்டு வந்தார் என்று அவரைக் குற்றப்படுத்தினார்கள் (எண். 14:1-10). அவர்களது அவிசுவாசத்தினால் அடங்கியுள்ளதான கலகம் செய்த அவர்களது பாவத்தை மன்னிக்கும்படி, மோசே கர்த்தரிடம், மக்களுக்காக பரிந்து பேசினான். கர்த்தர் ஜாதிகளை மன்னித்த போதிலும், இந்த பாவத்தின் லௌகீக தொடர்ச்சியினால், அவர்களை முதல் தலைமுறையில் உள்ள கலகக்காரர்கள் எல்லோரும் மரிக்கும் வரை, வனாந்திரங்களில் நாற்பது வருடங்கள் சுற்றித் திரியும்படி செய்தது. இஸ்ரவேலருக்கு எகிப்தை விட்டு வெளியேறும் போது போதுமான விசுவாசம் இருந்த போதிலும், வாக்குத்தத்த பூமியில் நுழைவதற்கான, போதுமான கீழ்ப்படிதலுடன் உள்ள விசுவாசம் இல்லை என்பதே மிகவும் துக்ககரமானதாய் உள்ளது (எண். 14:19-35). எபிரெயரை ஆக்கியோன் இந்த சரித்திர நிகழ்வுகளை, கிறிஸ்தவர்களுக்கு ஒரு எச்சரிப்பாகவும், இஸ்ரவேலர் செய்தது போல ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள

பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்கும் இராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று சொல்லியுள்ளார் (எபி. 3:7-12). அவருடைய மக்களின் மீது தேவனுடைய கோபமானது, நாற்பது வருட காலங்களாகவும் இருந்ததினால் "அவர்களுடைய சவங்கள் வனாந்திரத்தில் விழுந்துபோனதன்" காரணம், அவர்களது அவிசுவாசமானது அவர்களை கீழ்ப்படியாமைக்குள் நடத்திச் சென்றதே ஆகும் (எபி. 3:17-19).

சுவிசேஷத்திற்கு (நற்செய்தி) உடனடியாக கீழ்ப்படிவது முக்கியமானது என்பதால், ஒரு வசதியான நேரம் வரும் வரை, அதை தள்ளிப் போடக்கூடாது. கீழ்ப்படிதலின் விசுவாசமே, எப்பொழுதும் இரட்சிக்கும் விசுவாசமாயிருக்கிறது (யோவான் 3:36; எபி. 5:8, 9). புதிய ஏற்பாட்டிலே, மக்கள் பாவத்தினால் குற்றப்படுத்தப்பட்ட போது, இயேசு கிறிஸ்துவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வதுடன், ஞானஸ்நானத்தை வெறுத்துத் தள்ளவில்லை. பெந்தேகொஸ்தே நாளிலே, முதன் முதலில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதைக் கேட்ட போது அன்றையத் தினமே மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டார்கள் (அப். 2:37-41). நிறைய உதாரணங்களுடன், அப் போஸ்தலர் நடபடிகள் முழுவதிலும், இதே மாதிரி தான் பின்பற்றப்பட்டுள்ளன. சமாரியர்களின் கணக்கில், அவர்கள் உடனடியாக கீழ்ப்படிந்தார்கள் (அப். 8:12, 13) என்றும், மற்றும் எத்தியோப்பிய மந்திரியுடன் உள்ள மனமாற்ற பதிவின் படியும் (அப். 8:35-39), தர்சு பட்டணத்தானாகிய சவுல் (அப். 9:17, 18; 22:12-16), கொர்நேலியுவும் மற்றும் அவனது வீட்டாரனைவரும் (அப். 10:30-48) லீதியாள் மற்றும் அவளது வீட்டாரும் (அப். 16:13-15), பிலிப்பிய சிறைச்சாலைக்காரனும் மற்றும் அவனுடையவர்கள் அனைவரும் (அப். 16:25-34) கிறிஸ்புவும் மற்றும் அவன் வீட்டார் அனைவரும் (அப். 18:8) என்று இவர்கள் அனைவரையும் உள்ளடக்கி சொல்லப்பட்டுள்ளது. கர்த்தருடைய கிருபையினால் வரும் சுவிசேஷ அழைப்பினை, மக்கள் கீழ்ப்படிவதனை தள்ளிப் போடலாம் என ஒருபோதும் ஊகிக்கக்கூடாது. "இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம்," "இப்பொழுதே இரட்சண்ய நாள்" (2 கொரி. 6:2) என்று பவுல் கொரிந்தியர்களுக்கு சொல்வதைப் போல உள்ளது.

---

இறுதிக் குறிப்புகள்

[1]சில ஆங்கில வேதாகமங்களில், இந்த எபிரெய பெயரானது "எல்சடாய்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (NJPSV; NJB). [2]ஆதியாகமத்தில் (ஆதி. 12:8; 13:4; 14:22; 21:33; 22:14; 26:22, 25; 27:7; 28:16, 21) ஆணாதிக்க பயன்பாட்டில் "யேகோவா" என்ற பெயருக்கும், மற்றும் "சர்வ வல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் தான் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனாலும் யேகோவா [Yahweh] [யஃவே] என்றும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை" என்று யாத்திராகமம் 6:3இல் தேவனுடைய வாக்கின்படி, இந்த இரு பெயருக்குமிடையில்

ஒரு முரண்பாடு இருப்பதை, விவிலிய விமர்சகர்கள் பார்க்கிறார்கள். பின்வரும் பத்தியில், "யேகோவா" என்ற பெயர் அவருடைய மக்களால் அறியப்படாத ஒன்று என்று தேவன் சொல்லிக் கொண்டிருக்கவில்லை. பதிலாக, எகிப்திலே பத்து வாதைகளை அனுப்பியது போன்ற மிகப் பெரிய மீட்பின் நடவடிக்கைகளை மேற்கொண்டதும், மற்றும் சிவந்த சமுத்திரத்தை இரண்டாக பிரித்ததும் (யாத். 3:14, 15) போன்றவற்றால் தேவன் அவருடைய பிரசித்திப் பெற்ற பெயரை மிகவும் விசேஷமாக வெளிப்படுத்துவதை, இந்தச் சூழல் சுட்டிக் காட்டுகிறது. "(יהוה, *YHWH*) யஃவே என்ற பெயரானது, எபிரெய வினைச்சொல்லை (הָיָה, *hayah*, கயா) சார்ந்ததாகும். "இருக்கிறவைகளை இருக்கும்படியாகவும் நடக்கும்படியாகவும் அல்லது நிறைவேற்றும் படியாகவும் செய்கிற காரணக் கர்த்தாவாய்" அவர் இருக்கிறார். [3]Victor P. Hamilton, "שַׁדַּי," in *TWOT*, 2:907; பார்க்க தலமுட் ககிகா 12 எ. [4]Jon D. Levenson, "Genesis," in *The Jewish Study Bible*, ed. Adele Berlin and Marc Zvi Brettler (New York: Oxford University Press, 2004), 37. [5]J. Barton Payne, "תָּמִים," in *TWOT*, 2:973–74. [6]இந்த மேற்கோள்கள், இஸ்ரவேல் தேசத்தையும், ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரின் தெரிந்து கொள்ளப்பட்ட வரிசையில் வந்த சந்ததியாரையும் குறிப்பிடுகிறது. [7]J. Barton Payne, "אַבְרָהָם," in *TWOT*, 1:6. [8]யோனா ஒரு பெரிய மீனின் வயிற்றிலே "இராப்பகல் மூன்று நாட்கள்" இருந்த போதிலும், "பூமியின் தாழ்பாள்கள் என்னை அடைக்கிறதாயிருந்தது" (யோனா 1:17; 2:6) என்று அவர் அழகாக சொல்லியுள்ளார். [9]உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக்; கொடுத்தால், அவன் "உயிரோடிருக்கும் சகல நாளும்" நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பேன் என்று அன்னாள் ஒரு பொருத்தனை பண்ணினாள் (1 சாமு. 1:11, 22) - உயிரோடிருக்கும் *"எந்நாளும்"* என்பது ஒரு அழுத்தத்துடன் விளக்கப்பட்டுள்ளது. [10]Jack M. Sasson, "Circumcision in the Ancient Near East," *Journal of Biblical Literature* 85, no. 4 (December 1966): 475–76.

[11]John A. Wilson, trans., "Circumcision in Egypt," in *Ancient Near Eastern Texts Relating to the Old Testament*, 3d ed., ed. James B. Pritchard (Princeton, N.J.: Princeton University Press, 1969), 326. [12]Robert G. Hall, "Circumcision," in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 1:1025–26. [13]NIV யில் "ஆமாம், ஆனால்," என்று இருப்பது கூடியதுதான் என்றாலும், இந்த சூழலில் உதவுவதைவிட, அதிகமாக குழப்பத்திற்கு உள்ளாக்குவதாய் காணப்படுகிறது. [14]William Shakespeare *Romeo and Juliet* 2.2.43–44.